
# பாராளுமன்றத்தில்
# பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு....?



# உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீட்டை நோக்கி...

''உலகில் பெண்கள் சரிபாதி, வேண்டும் வேண்டும் சமநீதி'' என்ற குரலோடு பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு கேட்டு பன்னெடுங்காலமாக பல போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், உள்ளாட்சிகளில் 73வது சட்டத்திருத்தத்தின் மூலமாக இந்த இடஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டு 1996லிருந்து 2006 தேர்தல் வரை பல பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2006 தேர்தலில் தமிழகத்தில் மட்டும் 4,275 பெண் ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக செயலாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் 50% ஒதுக்கீடு அளிக்கலாம் என்று மத்திய அமைச்சரவை யோசித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஆங்காங்கே சில முனுமுனுப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ''ஏற்கனவே அளித்துள்ள ஒதுக்கீட்டில் தேர்தெடுக்கப்பட்டு வந்துள்ள பெண் ஊராட்சித் தலைவர்கள் பலர் செயல்படுவதில்லை. அவர்களுக்குப் பதில் அவர்களது கணவரோ அல்லது வேறு யாராவது ஆண் குடும்ப உறுப்பினரோதான் செயல்படுகிறார்கள். கூட்டங்களுக்குச் செல்வது, கிராம சபையை, கவுன்சில் கூட்டங்களை நடத்துவது, காசோலையில் கையெழுத்திடுவது தவிர அனைத்து வேலைகளையும் கணவர்களே செய்கின்றனர், இதில் எதற்கு 50% இடஒதுக்கீடு'' என்ற குரல்தான் அது.

ஊராட்சி மன்றத் தலைவர்களோடு பணியாற்றி வருபவர்கள், பத்திரிக்கையாளர்கள் ஏன் பல பெண்களே கூட இந்தக் கருத்தைப் பிரதிபலிக்கிறார்கள். இது முற்றிலும் தவறான, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டாகும். எப்பொழுதுமே விதிவிலக்குகளை விதியாக்கக்கூடாது.

சாதி மற்றும் அரசியல் அடிப்படையிலான பிரிவினை ஆண்களை விட பெண்களிடம் மிகவும் குறைவு. அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள் பெண்கள். ஊழல், லஞ்சம் போன்றவை ஆண்களைவிட பெண்களிடம் குறைவு. மேலும் அரசாங்கத் திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதில் அதிக அக்கறை, பெண்களிடம் உண்டு. பல்வேறு சிரமங்களுக்கு இடையேயும், உள்ளாட்சி குறித்த பிரச்சனைகளை குறிப்பாக நில ஆக்ரமிப்பு, சுற்றுச்சூழல் போன்றவை உள்ளிட்டவைகளை வெளிக்கொணர்வதில் பெண் ஊராட்சி மன்றத் தலைவர்கள் முன்னிலை வகிக்கிறார்கள்.

குடிதண்ணீர், கழிவறைவசதிகள், சுகாதாரம், பள்ளிகள் மேம்பாடு போன்ற விஷயங்களில் பெண் தலைவர்கள் சிறப்பாகக் கவனம் செலுத்துகிறார்கள்.

சரிசமமான வாய்ப்பு மறுக்கப்படுதல், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஒத்துழைக்க மறுப்பது, போதிய கல்வியறிவு இல்லாமை, குடும்பத்தை கவனிக்க வேண்டிய பொறுப்பு, ஊராட்சி நிர்வாகத்தில் குடும்ப ஆண் உறுப்பினர்களின் தலையீடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு இடையேயும். பெண் தலைவர்கள் சிறந்த தலைவர்களாக செயல்படுகின்றனர்.

29 துறைகளுக்கான அதிகாரம் இல்லாதது, நிதிப்பற்றாக்குறை போன்ற சிக்கல்கள் இருந்தாலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை பெண் தலைவர்கள் ஆண்களை விட சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்றனர்.

கிராம சபைக் கூட்டங்களை கூட்ட மற்றும் வெளிப்படைத் தன்மையோடு ஊராட்சி நிர்வாகத்தை கொண்டு செல்வதில் ஆண்களை விட பெண்கள் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

பல பொதுத் தொகுதிகளில் பெண்கள் போட்டியிட்டு வெற்றி பெற்று சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே இந்த குற்றச்சாட்டுகளை தூள் தூளாக்கி உள்ளாட்சிகளில் பெண்களுக்கான 50% ஒதுக்கீட்டை நோக்கி நாம் இணைந்து பயணிப்போம்.

# உள்ளாட்சிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு: மாறுவேடத்தில் வரும் லஞ்சம்!

– நிர்மலா புச்

**(ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர். பாலினப் பாகுபாடு, அரசு நிர்வாகம் ஆகியவை குறித்து எழுதிவருபவர்)**

கிராம ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், இடைநிலை ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்குவது என்று 2009 ஆகஸ்ட் மாதம் கூடிய மத்திய அமைச்சரவை முடிவு செய்தது. மகளிர் இயக்கங்கள் தங்கள் சுவரொட்டிகளில் "மண்ணில் பெண்கள் சரிபாதி" என்று எப்போதுமே அறிவித்து வந்துள்ளன. ஆனால் நில உடைமையிலோ, அரசியல் களத்திலோ அவர்களது சரிபாதி உரிமை இன்னும் அங்கீகரிக்கப்படாமலே இருக்கிறது. தற்போதைய இட ஒதுக்கீடு முயற்சிகள் 30% அல்லது மூன்றில் ஒரு பங்கு என்ற அளவிலேயே நின்றுவிட்டன.

1992ல் செய்யப்பட்ட 73வது சட்டத்திருத்தத்தின் மூலமாகத்தான் உள்ளாட்சிகளில் பெண்களுக்குத் தற்போது உள்ள மூன்றிலொரு பங்கு இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. இதற்கான சட்டமுன்வரைவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசிய அன்றைய ஊரக மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் இவ்வாறு கூறினார்:

"ஒவ்வொரு மட்டத்திலும் பெண்களுக்கு மொத்த இடங்களில் குறைந்தது மூன்றிலொரு பங்கு வழங்க வகை செய்திருக்கிறோம். மக்கள் தொகையில் பெண்கள் கிட்டத்தட்ட பாதியாக உள்ளனர் என்ற உண்மையை வைத்துப் பார்க்கிறபோது இந்த இட ஒதுக்கீடு கூட போதாது என்றே கருதலாம்; ஆனால், பெரும்பாலான மாநிலங்களில் இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறையைவிட இது குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகம்தான் என்பதை மரியாதைக்குரிய உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள்." (மக்களவை விவாதங்கள், 1992). அந்த சட்ட முன்வரைவில் தாழ்த்தப்பட்ட சாதிகளின் பெண்களும் பழங்குடியினப் பெண்களும் கூட சேர்க்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் தொகையில் பெண்களின் எண்ணிக்கைக்கு ஈடாக இட ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதையே அமைச்சரின் இந்தப் பேச்சு சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அப்போது இதற்கு அரசு தயாராக இல்லை. 1992ஆம் ஆண்டின் சட்டத்திருத்தத்திலேயே கொண்டுவரப்பட்டிருக்க வேண்டிய, பெண்களின் எண்ணிக்கைக்கு ஈடாக இட ஒதுக்கீட்டை அதிகரிப்பது என முடிவு செய்ய அரசுக்கு 17 ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

## பெண்களுக்கு சாதகம்

பல்வேறு அரசியல் கட்சிகளின் போட்டி அரசியல் காரணமாக இட ஒதுக்கீட்டிலிருந்து பெண்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. 1983ல் கர்நாடக மாநிலத்தில், ஜனதா தளம் கட்சியின் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது உள்ளாட்சி அமைப்புகளில் புதிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அப்போது அந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் ராமகிருஷ்ண ஹெக்டே, உள்ளாட்சித் துறைக்கான அமைச்சராக இருந்தவர் நஸீர் சாப். உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 25% இட ஒதுக்கீடு என்பதையும் அந்த அரசு கொண்டுவந்தது. 1980ஆம் ஆண்டுகளில், மேம்பாடு என்பதில் பெண்களை ஒருங்கிணைத்தல் என்றும், பின்னர் பெண்களின் மேம்பாடு என்றும் முன்வைக்கப்பட்ட நோக்கத்திற்கான வழிமுறைகளைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வழிமுறைகளின் முக்கிய அம்சமாக, முடிவுகள் எடுக்கப்படும் அனைத்து அமைப்புகளிலும் பெண்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் வலுவாக வலியுறுத்தப்பட்டது. பெண்களுக்கான தேசிய தொலைநோக்குத் திட்டம் (1988–2000), அனைத்து மட்டத்திலுமான ஊராட்சிகள் உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்படும் அமைப்புகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு என்பது பற்றிப் பேசியது. இது, முன்பு இரண்டு குழுக்களால் பரிந்துரைக்கப்பப்பட்ட பெண்களுக்கான முந்தைய இடஒதுக்கீட்டிலிருந்து ஒரு மாற்றத்தை நோக்கி நாம் நகர்ந்தாக வேண்டியுள்ளது என்பது படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் காட்டியது. 1957ம் ஆண்டில் பி.ஆர். மேத்தா குழுவும், 1978ம் ஆண்டில் அசோக் மேத்தா குழுவும் உள்ளாட்சி அமைப்புகளில் அடையாளப்பூர்வமாகப் பெண்களை நியமிப்பது அல்லது ஓரிரண்டு பெண்களை இணைத்துக்கொள்வது என பரிந்துரைத்தன. அதிலிருந்து, அன்றைய சூழலில் 30% அளவுக்கு முன்வைக்கப்பட்ட "தீர்மானகரமான பலத்துடன்" (Critical Mass) பெண்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை நோக்கி நகர்ந்தாக வேண்டும் என

படிப்படியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. 64 வது சட்டத்திருத்தத்தை இறுதிப்படுத்துவதற்கு முன்பாக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான பல தயாரிப்பு மாநாடுகள் நடைபெற்றன. அவற்றில், உள்ளாட்சிகளும் பெண்களும் என்ற விவாதம் இடம் பெற்றதில்லை. எனினும் கடைசியாக நடைபெற்ற அந்த மாநாடுகளில், பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

**காங்கிரஸ் கட்சியிடமிருந்து 1989ல் மத்திய ஆட்சியைக் கைப்பற்றிய வி.பி. சிங் அரசு, இது தொடர்பாக மற்றொரு சட்ட முன்வரைவைத் தயாரித்தது. அதில், சுழற்சி முறையில் "மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத" இட ஒதுக்கீட்டிற்கு வழிசெய்தது.**

64வது சட்டத்திருத்த முன்வரைவில் உள்ளாட்சி அமைப்பின் மூன்று அடுக்குகளிலும் பெண் உறுப்பினர்களுக்கு "கிட்டத்தட்ட 30% என்கிற அளவுக்கு" இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யப்பட்டது. மொத்த உறுப்பினர்களில் இந்த ஒதுக்கீடு மட்டுமல்லாமல், எஸ்சி/எஸ்டி உறுப்பினர்களுக்கான இடங்களிலும் 30% இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்க அதில் வகைசெய்யப்பட்டது. ஒரு உள்ளாட்சியில் மொத்தமே இரண்டு இடங்கள்தான் எஸ்சி/எஸ்டி பிரிவில் இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்றால், அந்த இரண்டில் ஒரு இடம் பெண்களுக்கானதாக இருக்க வேண்டும் என்று முந்தைய சட்டமுன்வரைவு கூறியது. எனினும் அதில் உள்ளாட்சித் தலைவர் பதவிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அது அந்தந்த மாநில சட்டமன்றத்தின் முடிவுக்கே விடப்பட்டது. காங்கிரஸ் கட்சியிடமிருந்து 1989ல் மத்திய ஆட்சியைக் கைப்பற்றிய வி.பி. சிங் அரசு, இது தொடர்பாக மற்றொரு சட்ட முன்வரைவைத் தயாரித்தது. அதில், சுழற்சி முறையில் "மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத" இட ஒதுக்கீட்டிற்கு வழிசெய்தது. ஆனால் அதிலும் தலைவர் பதவிக்கான இட ஒதுக்கீடு பற்றிச் சொல்லப்படவில்லை. 1991ல் காங்கிரஸ் கட்சி மறுபடியும் ஆட்சிக்கு வந்தபோது, 73வது சட்டத்திருத்தத்தின் மூலம், தலைவர் பதவி இடங்கள் உட்பட பெண்களுக்கு "மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத" இட ஒதுக்கீட்டிற்கு வழிசெய்யப்பட்டது.

இடஒதுக்கீட்டிற்கான பயணம் இப்படி ஒரு சோதனை முயற்சியாகவும், மெதுவானதாகவும்தான் இருந்தது. தயங்கித் தயங்கிக் கடைசி சட்டமுன்வரைவில்தான் தலைவர் பதவியில் இட ஒதுக்கீட்டிற்கு வழிசெய்யப்பட்டது. இந்த இட ஒதுக்கீடுகள் சுழற்சி முறையில் இருக்கும் என்ற சட்டப்பூர்வ ஏற்பாடு, பதவியில் இருக்கிற ஒருவர் அடுத்த தேர்தலின்போது புதிய இடத்தைத் தேட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் கொண்டுவரப்பட்டதன் தொடக்க உற்சாகத்தில், இந்த நிலைமை தெரியவரவில்லை. ஊராட்சிகளின் செயல்முறையை நன்கு அறிந்த எவருக்கும், கிராம ஊராட்சிமன்றத் தலைவர் என்பது ஒரு கவுரவமான பதவி என்பதும், அதற்கு மேல் அடுக்குகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்களும் அதை ஒரு முக்கியப் பதவியாகக் கருதுகிறார்கள் என்பதும் புரியும்.
இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1984ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெண் வாக்காளர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றார்கள். ராஜீவ் காந்தியின் பெரும் வெற்றிக்கு இது ஒரு முக்கியக் காரணம் என்ற கருத்து வலுவாக ஏற்பட்டது. பெண்களின் வாக்குகள் ஒரு அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றன. அப்போதிருந்து நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் பெண்களின் அரசியல்–பொருளாதார–சமூக அதிகாரத்திற்கு ஆதராவாகப் பேசத் தொடங்கின. கட்சிகளுக்குள் பெண்களுக்கான பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன, கிராம உள்ளாட்சிகளிலும் நகர உள்ளாட்சிகளிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதை ஆதரித்தன.

## அடையாள ஒதுக்கீடு

இத்தகைய நிகழ்ச்சிப் போக்குகளையும், மூன்றில் ஒரு பங்கு இடங்களிலும் சிலநேரங்களில் அதற்கு மேற்பட்ட இடங்களிலும் பெண்கள் வந்து அமர்ந்ததைத் தொடர்ந்து நடந்தது என்ன? அரசியலில் பெண்களுக்கு ஆர்வமில்லை, ஈடுபாடில்லை என்ற கட்டுக்கதைகள் கிளப்பிவிடப்பட்டன. வாய்ப்புள்ள பிரிவுகளைச் சேர்ந்த செல்வாக்குள்ள அரசியல்வாதிகளின் உறவினர்களாக இருக்கக்கூடிய பெண்கள் அந்த இடங்களில் வந்து சும்மா அமர்ந்துகொள்கிறார்களேயன்றி, உண்மையில் அந்தப் பதவிகளுக்கான பணிகளை மேற்கொள்வது என்னவோ ஆண்கள்தான் என்ற கருத்து பரப்பப்பட்டது. எனினும் இக்கதைகள் பொய்மையானவையே என்பதை ஆய்வு முடிவுகள் காட்டின. பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவுகளிலிருந்து வந்த முதல் முறையாக வந்த இளம் பெண்களின் பணிகள் பற்றிய ஆவணப்பதிவுகள் அவர்களது பங்களிப்பும் செயல்பாடும் எந்த அளவுக்கு உள்ளன என்பதை வெளிப்படுத்தின (எடுத்துக்காட்டு: புச்

ஆவணம், 1999). எனினும் இந்த உள்ளாட்சி அமைப்புகளில் என்ன நடக்கிறது என்றால், ஒரு ஆணாதிக்க அதிகாரப் போக்குதான் நிலவுகிறது. பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களே தவிர அதிகாரத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களது பணிகள் தொடர்ச்சியாகக் குறைத்து மதிப்பிடப்படுகின்றன.

ஊராட்சிகளில் பெண்களின் பங்கேற்பும் தலைமையும் எந்த அளவில் இருக்கிறது என்ற ஆவணப்பதிவுகள் ஒரு புறம் இருந்தாலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வந்த பெண்கள் வெறும் பொம்மைகள்தான், அவர்களது கணவன்மார்களோ அல்லது இதர ஆண் உறவினர்களோ தான் அதிகாரம் செலுத்துகிறார்கள், அவர்களது பொறுப்புகளை நிறைவேற்றுகிறார்கள் என்ற எண்ணம் நிலவுகிறது. பெண்கள் எப்படி தங்களது பன்முகப் பொறுப்புகளை ஒருங்கிணைந்து மேற்கொள்கிறார்கள், எப்படி தங்களது ஊராட்சிப் பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்பது பற்றிய புரிதல் போதிய அளவுக்கு இல்லை. 'சர்பாஞ்ச் பதி' (ஊராட்சித் தலைவர்) என்றும், 'பிரதான் பதி' (முதன்மைத் தலைவர்) என்றும், கணவன் என்ற பொருள்தரும் ''பதி'' என்ற ஆண்களைக் குறிப்பிடுகிற சொல் உள்ளாட்சி அகராதியில் இடம்பிடித்துவிட்டது. பெண் பிரதிநிதிகள், பெண் தலைவர்களின் உள்ளாட்சி செயல்பாடுகளில் அவர்களது கணவன்மார்கள் தலையிடுவதில்லை, சொல்லப்போனால் அவர்களது பணிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்ற போதிலும் கூட இந்தச் சொற்கள்தான் நடைமுறையில் உள்ளன (சர்பாஞ்ச் பதி, பிரதான் பதி என்ற சொற்கள் வட மாநிலங்களில்தான் நடைமுறையில் உள்ளன என்றாலும் தமிழகத்திலும் கூட தலைவர் என்றால் ஆண்தான் என்பது போல் புரிந்து கொள்ளப் படுகிறது மொழிபெயர்ப்பாளர்). இவ்வாறு சுயமாகச் செயல்படும் பெண்களின் எண்ணிக்கை அப்படி ஒன்றும் சிறியதல்ல என்றாலும் கூட, இதே பொறுப்புகளில் உள்ள மற்றவர்களால் இந்தப் பெண்கள் முன்மாதிரிகளாகக் கருதப்படுவதில்லை. எனினும், ஊராட்சிகளில் பெண்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவதையும் பணிகளை மேற்கொள்வதையும் அதிகாரிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்த நிலையில், கிராம ஊராட்சிகளில் மூன்றில் ஒரு பங்காக உள்ள பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை சரிபாதியாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை மகளிர் இயங்கங்களிலிருந்து பரவலாக வரவில்லை என்கிறபோது, மத்திய அரசு அதனை 50% அளவுக்கு உயர்த்துவதற்கான முன்முயற்சியை மேற்கொண்டிருப்பது ஏன்? அடுத்த கேள்வி, நகர உள்ளாட்சிகளில் இதனை பின்னர் நடைமுறைப்படுத்தலாம் எனக்கூறி, இந்த ஆலோசனையை எதற்காக கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் முன்வைக்க வேண்டும்? முந்தைய 64வது சட்டத்திருத்தம் வந்தபோது கூட, கிராம ஊராட்சிகளி–லிருந்துதான் இந்த ஆலோசனை தொடங்கியது என்பது நினைவு கூரத்தக்கது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் நலிந்த சமூகங்களுக்கான இட ஒதுக்கீடு என்பது ஏற்கெனவே அவர்களது மக்கள் தொகைக்கு இணையான விகிதத்தில்தான் இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு மட்டும் ஏன் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு என்பதிலிருந்து தொடங்க வேண்டும்? இதில் மத்திய அரசு மாநிலங்களைப் பின்பற்றியது போல் தெரிகிறது.

மாநில அரசுகள் தங்களது உள்ளாட்சி சட்டங்களில் திருத்தம் செய்வதன் மூலம் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்க முடியும். அதற்காக மத்திய அரசு அரசமைப்பு சாசனத்தில் திருத்தம் கொண்டுவர முன்முயற்சி எதுவும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. 73வது சட்டத்திருத்தம் பெண்களுக்கு ''மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத இடங்கள்'' ஒதுக்கப்படுகிறது என்றுதான் சொல்கிறதே தவிர, ''மூன்றில் ஒரு பங்கு இடங்கள்'' (மட்டுமே) ஒதுக்கப்படுவதாகச் சொல்லவில்லை. எனவே மாநிலங்களில் எப்போது வேண்டுமானாலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களுக்கு மேல் இட ஒதுக்கீடு செய்வதற்கான சட்டம் கொண்டுவர முடியும். ஆனாலும் எந்த மாநிலமும் அதைச் செய்ய முன்வரவில்லை.

பெரும்பாலான மாநிலங்கள் திட்டவட்டமாக எத்தனை சதவீதம் என்று வரையறுக்காமலே ''மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத இடங்கள்'' என்பதை மட்டும் எடுத்துக்கொண்டன. தற்போது அனைத்து அரசியல் கட்சிகளும் புதிய கூட்டாளிகளைத் தேடிக் கொண்டிருக்கும் நிலையில், மாநிலங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. 2006ல் இதில் பீகார் மாநிலம் முன்னிலை வகித்தது. சமூக ரீதியான புதிய ஆதரவாளர்களைத் திரட்டுவதற்கான முயற்சிகளில் அப்போது ஈடுபட்டிருந்தார் முதலமைச்சர் நிதிஷ் குமார். மிகவும் பிற்படுத்தப்பட்டோரும் பெண்களும் அதில் இருந்தனர். உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்குத் தட்டுத்தடுமாறிக்கொண்டிருந்த அந்த மாநிலம், இறுதியாக பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கிய பின் அந்தத் தேர்தல்களை நடத்தியது. அதன் பின் மத்திய பிரதேசம், சத்திஷ்கர், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்க ஏற்ற வகையில் தங்களது உள்ளாட்சிச் சட்டங்களில் திருத்தம் கொண்டுவந்தன.

## சம்மதமின்றி சகித்துக்கொள்ளப்படுகிறது

உள்ளாட்சிகளுக்குப் பெண்களைக் கொண்டுவந்த அரசியல் கட்சிகளுக்கு, அவர்களது பங்கேற்பை வளர்க்க வேண்டும் என்றோ, தலைமைத் தகுதியை வளர்க்க வேண்டும் என்றோ விரிவான நோக்கம் இல்லை. கட்சி அடிப்படையிலும் கட்சிச் சின்னங்களின் அடிப்படையிலும் ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்ட ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில், நாங்கள் 73வது சட்டத்திருத்தத்திற்குப் பிந்தைய உள்ளாட்சிகளில் பெண்களின் அனுபவங்கள் குறித்து ஒரு ஆய்வு நடத்தினோம். அப்போது கருத்துக் கூறிய பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பெரும்பலான பெண்கள், தங்களது முதல் பதவிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த நிலையில், தாங்கள் சிறப்பாகச் செயல்பட்டிருந்தபோதிலும் கூட, மறுபடியும் போட்டியிட விரும்புவதாகத் தெரிவித்த போதிலும் கூட, தங்களது கட்சிகள் அடுத்த தேர்தலில் தங்களை வேட்பாளர்களாக நிறுத்தவில்லை என்று தெரிவித்தனர். மற்ற பெண்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டியிருக்கிறது என்று தங்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. இதே வாதம் ஆண்களுக்குச் சொல்லப்படவில்லை.

மேலும், பெண்கள் அவர்களுக்காக என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்கள். ஊராட்சித் தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்படாத மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்கள் சிறப்பாகச் செயல்பட்டுவருவது தெரிகிறது.

சமுதாயத்தில் பெரும்பகுதியினர் இன்னமும் பெண்கள் உள்ளாட்சிகளில் பங்கேற்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது சகித்துக்கொள்ளப்படுகிறது என்று வேண்டுமானால் சொல்லலாமேயன்றி, மனமுவந்து ஏற்றுக் கொள்ளப் படுவதாகக் கூற முடியாது. உள்ளாட்சிகளில் பெண்கள் பங்கேற்பு பற்றிய விவாதங்கள் நடக்கிறபோதெல்லாம் படித்த பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுவதுண்டு. இப்படிப்பட்ட தகுதி எதுவும் ஆண்களுக்குச் சொல்லப்படுவதில்லை.

பெண்கள் தங்களது தலைமைத் தகுதியை வளர்த்துக் கொள்ளவும், அதன் பயன்களை விளைவிக்கவும் உள்ளாட்சி இட ஒதுக்கீடு என்ற வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்கு மிகப்பெரும் தடைக்கல்லாக இருப்பது, அந்த இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் செயல்படுத்தப்படும் என்பதுதான். குறிப்பாக உள்ளாட்சித் தலைவர்களுக்கான இட ஒதுக்கீடு சட்டப்பூர்வமான கட்டாயமாக சுழற்சி முறையில் இருப்பது மிகப்பெரும் தடையாகும். பெண்கள் தங்களது செயல்பாட்டின் அடிப்படையில் மீண்டும் மக்களைச் சந்தித்து தங்களை மறுபடியும் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் போகும்போது இந்த சுழற்சி முறை அவர்களது செயல்பாட்டிற்கு இடையூறாக, பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. பெண்களுக்கான இட ஒதுக்கீடு அனைத்துப் பதவிகளுக்கும்தான் என்பது மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு உள்ளேயும் செய்யப்பட்டிருக்கிறது. சில மாநிலங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டிற்கு உள்ளேயும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பெண்கள் மறுபடியும் மறுபடியும் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கு வரம்பு கட்டுவதாக இருக்கிறது. பெண்கள் இப்பிரச்சனையை தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள்.

**பெண்கள் அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்கள். ஊராட்சித் தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்படாத மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்கள் சிறப்பாகச் செயல்பட்டுவருவது தெரிகிறது.**

தமிழ்நாட்டில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் சுழற்சி முறை என்பது இரண்டு பதவிக்காலத்திற்கு ஒரு முறை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலோ பிரச்சனை நீடிக்கிறது. அடித்தள மட்டத்தில் பெண்களின் செயலூக்கமுள்ள தலைமைத் தகுதியை ஊக்குவிப்பதிலும் மேம்படுத்துவதிலும் அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், சுழற்சி முறை என்ற ஏற்பாடு குறித்து மறு ஆய்வு செய்தாக வேண்டும். இது, மக்களுக்கும் தங்களால் தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகள் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கா இட ஒதுக்கீடு தொடர வேண்டும். அதனை 50% அளவிற்கு உயர்த்துவது என்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையேயாகும். நம் சமுதாயத்தின் ஆணாதிக்கக் கலாச்சாரத்தில், உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் பெரும்பாலான பெண்கள், இட ஒதுக்கீடு என்ற ஏற்பாடு இல்லாமல் அவ்வாறு போட்டியிட்டிருக்க முடியாது என்பதை எங்களது கள ஆய்வுகளும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக உள்ள பெண்களிடம் நடத்திய நேர்க்காணல்களும் தெளிவாகக்

காட்டுகின்றன. எனினும், 50% ஆக உயர்த்துவது என்ற முடிவு எடுக்கப்பட்ட முறை, அந்த முடிவு எடுக்கப்படுகிற காலகட்டம், சுழற்சி முறை குறித்த பிரச்சனைத் தீர்வு காணத் தவறியிருப்பது, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் இட ஒதுக்கீடு கொண்டுவருவதற்கான ஆழ்ந்த அக்கறையுள்ள முயற்சிகள் எதுவும் இல்லாதிருப்பது ஆகியவை காரணமாக, இந்த முடிவை மகளிர் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள சுணக்கத்திலிருந்து மக்கள் கவனத்தைத் திசைதிருப்பும் தந்திரமாகவே காண வேண்டியிருக்கிறது.

மகளிர் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவு நிறைவேற்றப்–படுமானால் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் நுழையக்கூடிய பெண்கள் மாறுபட்ட வகையினராக இருப்பார்கள். உள்ளாட்சிகளில், குறிப்பாக கிராம ஊராட்சி மன்றங்களில் உள்ள பெண்களை விடவும் மாறுபட்டவர்களாக இருப்பார்கள். கொள்கைகளை உருவாக்குவதில் பெண்களின் தாக்கம் என்பதைப் புறக்கணிப்பது கடினமாகிவிடும். நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக இருக்கிறபோது, உள்ளாட்சிகளில் இருக்கும் பெண் பிரதிநிதிகளுக்கும் அது ஆதராவக அமையும். உள்ளாட்சிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது தேசிய அளவிலான அரசியல் தலைவர்களுக்கும் இதர உயர்மட்டத் தலைவர்களுக்கும் ஒரு சவால் அல்ல. ஆனால், நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அந்தத் தலைவர்கள் தங்களது அதிகாரத்தையும் தலைமைத் தகுதியையும் பெண்களோடு பகிர்ந்துகொண்டாக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தும்.

இதைத்தான், ஆணாதிக்க மன நிலைக்கு ஆட்பட்டுள்ள அந்தத் தலைவர்களால் ஏற்க முடியவில்லை. சில தலைவர்கள், தொகுதி மறுசீரமைப்பு காரணமாக தங்களது பதவிகளை இழக்க நேரிட்டது போல பெண்களுக்கான இட ஒதுக்கீட்டால் தங்களது பதவிகளைப் பெண்களிடம் இழக்க நேரிடும் என்று அஞ்சுகிறார்கள். அதனால்தான் மகளிர் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவுக்கு இவ்வளவு எதிர்ப்பு. அதனால்தான் உள்ளாட்சிகளில் மட்டும் அதிகமான சலுகை. எனது இந்தக் கருத்து தவறானது என்றால், அது மகளிர் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவு தொடர்பான சரியான முடிவெடுக்கப்படுவதன் மூலம் நிரூபிக்கப்படட்டும்.

**- EPW, July 2010**

## தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் : தமிழகத்திற்கு 2 தேசிய விருதுகள்

தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தமிழகத்திற்கு இரண்டு தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் என்ற பெயரில் முதற்கட்டமாக 2.2.2006 முதல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களிலும், இரண்டாவது கட்டமாக 1.4.2007 முதல் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களிலும், மூன்றாவது கட்டமாக 1.4.2008 முதல் மீதமுள்ள 20 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் 2.10.2009 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 13.5.2006 முடிய இத்திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3.00 கோடி மட்டுமே. தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மூலமாக, தமிழ்நாட்டில் இதுவரை 2939 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நாட்டிலேயே இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இதற்காக மத்திய அரசும், மத்திய திட்டக்குழுவும் தமிழக அரசை பாராட்டியுள்ளன. 2007–08ஆம் ஆண்டில் இந்தியாவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 612 மாவட்டங்களில் 13 மாநிலங்களிலுள்ள 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசு இந்த திட்டத்திற்கு விருது வழங்கியுள்ளது. அதில் தமிழ்நாட்டில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக அதாவது திண்டுக்கல், சிவகங்கை மற்றும் கடலூர் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டது.

2008–09 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தேசிய அளவில் விருது வழங்கிட 15 மாநிலங்களைச் சேர்ந்த 24 மாவட்டங்கள் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டது. அதில், 9 மாநிலங்களுக்கு அதிகபட்சமாக தலா 2 விருதுகள் வழங்கப்படவுள்ளது. எஞ்சிய 6 மாநிலங்களுக்கு தலா ஒரு விருது வழங்கப்படவுள்ளது. அதனடிப்படையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் ஆகிய 2 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை (பிப்2) அன்று புதுதில்லியில் நடைபெறவுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட சம்மேளன விழாவில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் எம். ஜெயராமன் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனிச்சாமி ஆகியோருக்கு இந்த தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**– 2.2.10, தீக்கதிர்**

# தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான சாதிய பாகுபாடுகளும், தீண்டாமை குற்றங்களும்

– அருள், SIRD – சீர்காழி

காலங்காலமாக சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப் பட்ட, தீண்டாமை வன்கொடுமைகளுக்கு உள்ளான மக்கள் சமூக நீதி பெற வேண்டும், ஜனநாயக அதிகார அமைப்பில் பங்கு பெறவேண்டும் என்ற நோக்கில் இட ஒதுக்கீடு முறை கொண்டு வரப்பட்டது. கல்வி, வேலைவாய்ப்பு, ஜனநாயக அதிகார அமைப்பு ஆகியவற்றில் வழங்கப்படுகின்ற இட ஒதுக்கீடு என்பது சலுகையல்ல. இந்திய அரசியல் சாசனத்தில் சாதகமான பாகுபாடு (Positive Discrimination) என்ற சமூக நீதியின் அடிப்படையான கருத்தியலின் அடிப்படையில் உரிமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தின் தந்தை, மாமேதை டாக்டர். அம்பேத்கார் உள்ளிட்ட தேசிய தலைவர்கள் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் அரசியல் சாசனத்தில் இடஒதுக்கீடு இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் ஊராட்சி அமைப்புக்களில் தலித்களும், பெண்களும் பங்கு பெறும் வகையில் 1993ம் ஆண்டு 73 மற்றும் 74 ஆம் சட்டதிருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த இட ஒதுக்கீட்டு முறையை சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்க சாதியினர், அதிகாரத்திலிருப்போர் தலித்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பல்வேறு பாகுபாடுகளை, வன்கொடுமைகளை நிகழ்த்தி வருகின்றனர். ஆதிக்கச் சாதியைச் சார்ந்த நிலவுடைமையாளர்களும், பண்ணையார்களும் காலங்காலமாக அனுபவித்து வந்த உள்ளாட்சிப் பதவிகளை தலித்களும், பெண்களும் பங்கு பெறுவதை பொறுக்கமுடியாமல் அவர்கள் மீது வன்கொடுமைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏவி விடுகின்றனர். ஆதிக்க சாதியினர் இதுவரை தன்னை சார்ந்து, தனக்கிட்ட இழி தொழில்களை அடிமை போல நிறைவேற்றி வந்த தலித்கள் அதிகாரம் பெறுவதில் துளியும் விருப்பமில்லாமல் தீண்டாமை வன்கொடுமைகளில் ஈடுபடுகின்றனர்.

மதுரைமாவட்டம் கீரிபட்டி, பாப்பாபட்டி நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டம் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் 1996 முதல் 2006 வரை 10 ஆண்டுகளாக தமிழக அரசின் அனைத்து அதிகார கட்டமைப்புகளையும் பயன்படுத்தி தேர்தல் நடத்த முடியவில்லை. இது தீண்டாமை வன்கொடுமையின் உச்சகட்டநிலையாகும். 2001ம் ஆண்டு கீரிபட்டி கிராமத்தில் ஆதிக்க சாதியிரை எதிர்த்து வேட்புமனு தாக்கல் செய்த பூங்கொடி என்ற இளைஞர் இன்னும் கிராமத்திற்கள் நுழைய முடியவில்லை. நாட்டார் மங்கலம் கிராமத்தில் வேட்புமனு தாக்கல் செய்த சரஸ்வதி என்ற தலித் பெண்ணின் வீடு ஆதிக்க சாதியானரால் அடித்து நொறுக்கப்பட்டது.

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா மேலவளவு ஊராட்சியில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முருகேசன் என்ற தலித் இளைஞர் ஆதிக்க சாதியினரால் அச்சுறுத்தப்பட்டு, பஞ்சாயத்து அலுவலகத்தில் நுழைய முடியாத சூழ்நிலையில், அங்குள்ள தலித் வீடுகளை தீ வைத்து கொளுத்தினார்கள். 1997 ஜீன் 30ம் தேதி கொளுத்தப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு கோரி மாவட்ட ஆட்சித்தலைவரை சந்தித்து விட்டு தன் உறவினர்களுடன் பேருந்தில் ஊர் திரும்பிய முருகேசனை, கல்லுக்கடை ரோடு என்ற இடத்தில் பேருந்தை மறித்து ஆதிக்க ஜாதி வெறியர்கள் முருகேசன் மற்றும் ராஜா, செல்லத்துரை, சேவகமூர்த்தி, மூக்கன், பூபதி ஆகியோரை ஓட, ஓட விரட்டி வெட்டி கொன்றனர். இது தலித் தலைவர்கள் உள்ளாட்சி அமைப்புக்களில் பங்க பெறுவதில் மிகவும் அச்சுறுத்தலாக இருந்தது.

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம் ஊரப்பாக்கம் கிராம ஊராட்சித் தலைவரான தலித் சமூகத்தைச் சார்ந்த திருமிகு. மேனகா என்பவர் அரசின் புறம்போக்கு மற்றும் பொது நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்து அந்நிலங்களை ஏழை மக்களுக்கு கிடைப்பதற்கு போராடியதால் 29–03–2001 அன்று படுகொலை செய்யப்பட்டார்.

திருநெல்வேலி மாவட்டம், நக்கலமுத்தன்பட்டி ஊராட்சித்தலைவர் ஜக்கையன் ஆதிக்கச் சாதியினரின் தாக்குதலுக்குள்ளாகி கொலையுண்டார். மேற்கண்ட அனைத்து சம்பவங்களும் தலித்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பங்கு பெறுவதை தடுக்கவும், அவர்களிடம் அச்சத்தை ஏற்படுத்தவும், திட்டமிட்டு ஆதிக்க சாதியினர் செய்துள்ளனர் என்பது உண்மையாகிறது. தலித்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளாட்சி பதவிகளில் தலித்கள் போட்டியிட கூடாது என்ற மனிதத்தன்மையற்ற மனப்பான்மையுடன் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் பாதிக்கும்மேற்பட்ட இடங்களில் அச்சமூகத்தினர் தேர்தலில் போட்டியிடுவதை ஆதிக்க சாதியினர் தொடர்ந்து தடுத்து வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தலித் தலைவர்கள் ஆதிக்க ஜாதியினரின் பினாமிகளாக

கட்டாயத்தின் பேரில் செயல்படுகின்றனர். தலித்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளில் அந்த ஊராட்சியைச் சார்ந்த ஆதிக்க சாதியினர் தங்களிடம் வேலை செய்யும் தலித்தை தேர்தலில் போட்டியிடச் செய்து, தன்னுடைய பணம் மற்றும் தனது ஜாதி ஓட்டுகள் மூலம் வெற்றி பெறச் செய்து பினாமியாக வைத்துக்கொள்கின்ற சூழ்நிலை தமிழகத்தில தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தலித் ஊராட்சி தலைவர்கள் இருக்கின்ற ஊராட்சியில் துணைத்தலைவராக ஆதிக்க சாதியினர் இருந்தால் அந்த ஊராட்சியில் தலைவரை செயல்பட விடாமல் பல்வேறு வன்கொடுமைகளை துணைத் தலைவர் செய்து வருகிறார். தெரு விளக்கு செப்பனிட கூட துணைத் தலைவரிடம் சம்மதம் வாங்கித் தான் செய்ய வேண்டும் என்ற நிலை உள்ளது. மேலும் திட்டங்கள் நிறை வேற்றவிடாமல் தடுப்பது, காசோலையில் கையொப்பமிட மறுப்பது, உயர் அதிகாரிகளிடம் தலித் தலைவர் குறித்து பொய் புகார் கூறுவது என தொடர்ந்து தொல்லை கொடுத்து தலித் தலைவர்களை மனரீதியாக பாதிப்புக்குள்ளாக்குகிறார்கள்.

நாகை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம் மகேந்திரபள்ளி ஊராட்சி தற்போது தலித்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. திரு. சத்தியசீலன் என்ற தலித் இளைஞர் ஊராட்சித் தலைவராக இருக்கிறார். இதற்குமுன் ஊராட்சித் தலைவராக இருந்து ஆதிக்க சாதியைச் சார்ந்த சிவபாலன் என்பவர் துணைத் தலைவராக உள்ளார். இவர் தலித் ஊராட்சி மன்றத் தலைவர் செயல்படமுடியாமல் தடுக்க பல வழிகளிலும் தடைகளை ஏற்படுத்தி வருகிறார். இதனால் ஊராட்சிமன்றத் தலைவர் எந்த திட்டத்தையும் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளார்.

**தலித் ஊராட்சித் தலைவர்கள் இருக்கக்கூடிய ஊராட்சியில் கிராம சபை கூட்டங்களில் ஆதிக்கச் சாதியினர் கலந்து கொள்வதில்லை.**

திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 40 ஊராட்சி மன்றங்களில் தலித் தலைவர்கள் ஆதிக்க சாதியினரின் பினாமியாக கட்டாயத்தின் பேரில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தலித் ஊராட்சித் தலைவர்களாக இருக்கும் ஊராட்சிகளில் ஆதிக்க சாதியினர் பஞ்சாயத்து உதவியாளராக இருந்தால் அவர் தலித் தலைவர்களை மதிப்பதில்லை. காசோலை புத்தகம், பதிவேடுகள், கணக்கு புத்தகங்கள் அனைத்தும் உதவியாளரே தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தலைவரிடம் எவ்வித அனுமதியும் இல்லாமல் சுயமாக செயல்படுகிறார். இதை தலித் தலைவர்களால் தட்டி கேட்க முடியவில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதை செய்யவேண்டிய நிலையில் தலித் தலைவர்கள் உள்ளனர். தலித் பெண் ஊராட்சித் தலைவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறைவானதல்ல. நாகைமாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் மாதிரவேளூர் ஊராட்சி தலித் பெண் தலைவர் ரமாமணி இரு சக்கர வாகனத்தில் சென்றால் கூட ஆதிக்க ஜாதியினரின் கேலி, கிண்டலுக்குள்ளாகிறார். மேலும் ஊராட்சி அலுவலகத்தில் நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்தால் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எவ்வித திட்டங்களையும் ஆதிக்க சாதியினர் பகுதியில் செயல்படுத்த முடியவில்லை. தலித் ஊராட்சித் தலைவர்கள் இருக்கக்கூடிய ஊராட்சியில் கிராம சபை கூட்டங்களில் ஆதிக்கச் சாதியினர் கலந்து கொள்வதில்லை. குறிப்பாக தலித் குடியிருப்பு பகுதிகளில் கிராம சபை கூட்டங்கள் நடந்தால் முற்றிலுமாக ஆதிக்கச் சாதியினர் புறக்கணிக்கிறார்கள். மாவட்ட, ஒன்றிய அளவிலான அரசு அதிகாரிகள் தலித்தலைவர்களை ஏளனமாக நடத்துவதுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும், நிதி ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 65 தனி ஊராட்சிகளில் 35 ஊராட்சித்தலைவர்கள் தங்கள் ஊராட்சியில் சாதி பாகுபாடு உள்ளது என்பதை தேசிய மனித உரிமை ஆணையத்திற்கும், பத்திரிக்கைகளுக்கும் புகார் மனு கொடுத்துள்ளனர். இதனால் கோபமடைந்த மாவட்ட அரசு அதிகாரிகள் இந்த வாக்குமூலத்தை திரும்ப பெற சொல்லி மிரட்டி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சிமன்றத் தலைவர்களான அண்ணாதுரை. பாக்கியம் உள்ளிட்ட 6 தனி ஊராட்சித் தலைவர்கள் 10.01.2008 அன்று செய்தியாளர்களை சந்தித்து, தங்கள் மீது கடுமையான சாதிய பாகுபாடு காட்டப்படுவதாக கூறினார்கள். இந்த தலைவர்கள் யாருக்கும் ஊராட்சி அலுவலகத்தில் அமர்ந்து பணிபுரிய அனுமதி இல்லை. இந்த தலைவர்கள் எதிர்கொண்டு வரும் சாதிய பாகுபாடுகள் குறித்து தகவல்களை சேகரித்து, பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை செயலர் ஆகியோரை சந்தித்து பிரச்சனைகளை எடுத்துரைக்க தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு ஆதரவளித்தது.

மதுரை மாவட்டம் கொடிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஊராட்சி தலைவர் பாலமுருகன், தலித் ஊராட்சித் தலைவராக இருந்தாலும் கூட இன்னும் தன் செருப்பை கையால் தூக்கிக்கொண்டு தான் நடந்து செல்லவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

தேனி மாவட்டத்தில் உள்ள நரியூத்து ஊராட்சி தலைவரான பழனியம்மாள் தங்கள் ஊர் கோவிலுக்குள் இன்னும் கூட நுழைய முடியாது. தேநீர் கடைகளில் இன்னும் இரட்டை தம்ளர் முறை இருக்கிறது.

இதுபோன்று நாடு முழுவதும் தலித் ஊராட்சித் தலைவர்கள் மீதான பாகுபாடும். தீண்டாமை குற்றங்களும் இருந்தாலும் அவர்களுடைய பிரச்சனைகளை / குறைகளை அச்சமின்றி வெளிப்படுத்துவதற்கும், தீர்வு காண்பதற்கும் எவ்வித அமைப்பும் இல்லை. பிரச்சனைகளை துணிந்து வெளிப்படுத்தும் போது ஆதிக்க சாதியினரால், அதிகார வர்க்கத்தால் மீரப்படுகிறார்கள். கொலைவெறி தாக்குதலுகுள்ளாகிறார்கள். இதனால் தலித்துக்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பங்கு பெற்று அதிகாரப் பெற்றவர்களாக உருவாகி சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற கருத்தியியல் கேலி கூத்தாகிறது.

அரசின் அறிக்கையின்படி தலித்துகளுக்கு எதிராக 538 கிராமங்களில் பாகுபாடு நிலவுகிறது. தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் தீண்டாமை வன்கொடுமை சட்டத்தின் கீழ் பலகுற்றங்கள் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் ஏழு லட்சம் புகார்கள் பதிவு செய்யப் படுகின்றன. ஆனால் இவையாவும் வன்கொடுமை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. ஊராட்சித் தலைவர்களுக்கே இந்த கதி என்றால் சாதாரண தலித்குடிமகனின் நிலைமை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. தலித் ஊராட்சி மன்றத்தலைவர்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட்டு, தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற தமிழக அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

## பரிந்துரைகள்:

- தலித் பஞ்சாயத்து தலைவர்கள் சுயமாக, சுதந்திரமாக நிர்வாகம் செய்யவும், திட்டங்களை மேற்கொள்ளவும் தேவையான தகுதி, திறமைகளை வளர்த்துக் கொள்ள சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும்.

- தலித் பஞ்சாயத்து தலைவர்கள் தங்களுடைய பிரச்சனைகளை / குறைகளை / தடைகளை பகிர்ந்து கொள்ள அதிகாரம் பெற்ற தனி அமைப்பு மாவட்டந்தோறும் உருவாக்கப்பட வேண்டும். இந்த அமைப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் பங்கு பெற வேண்டும். இங்கு எடுக்கப்படும் முடிவுகள் உடனடியாக எடுத்து கொள்ளப்பட வேண்டும்.

- வறுமையில் உள்ள தலித்துகளின் வாழ்வாதாரத்திற்கு தேவையான நில பங்கீடு இல்லாமல் இருப்பது மிக பெரிய குறையாகும். இதனால் தலித்கள் பினாமியாக செயல்படும் தன்மை உள்ளது. தலித் ஊராட்சித் தலைவர்களை மிரட்டுபவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை போதுமான அளவில் பிரயோகிக்காமல் இருப்பதும் தலித் மக்கள் தொடர்ந்து பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதற்கான காரணங்களாகும். இதனால் வன்கொடுமைச் சட்டத்தை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

- தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென ஒதுக்கப்படும் பஞ்சாயத்துக்களின் துணைத்தலைவர் பதவியும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

- தலித் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ள ஊராட்சிகளில் பணிபுரியும் உதவியாளர்கள் ஆதிக்க சாதியினராக இருந்து, ஊராட்சிமன்றத் தலைவரின் சுதந்திரமான செயல்பாட்டிற்கு தடையாக இருந்தால், தலித் இனத்தைச் சார்ந்த உதவியாளரை நியமித்து கொள்ள தலித் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

- தலித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள், இழிவாக பேசுபவர்கள், கேலி, கிண்டல் செய்பவர்கள், கட்டாயப்படுத்தி காசோலை மற்றும் பதிவேடுகளில் கையெழுத்து போட செய்பவர்கள் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- தலித் பஞ்சாயத்து தலைவர்களை ஏளனமாக நடத்துதல், திட்டங்கள், நிதியை தாமதபடுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடும் அரசு அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- தலித் ஊராட்சித் தலைவர்கள் உள்ள ஊராட்சியில் கிராம சபை கூட்டங்களில் ஆதிக்க சாதியினர் பங்கேற்க மாவட்ட, ஒன்றிய அளவிலான அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- பங்கேற்பு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், சமூக நீதியை நிலைநாட்டவும், ஏற்ற தாழ்வற்ற சமூக வளர்ச்சி உருவாகவும், அனைவரும் அனைத்து உரிமைகளும் பெறவும் தேவையான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

***Paper Circulated at the consultation on Status of Panchayat Government in Tamil Nadu, 24th & 25th March 2009, Organised by Human Rights Foundation.***

# தலித்துகளும் ஏழைகளும் தேசிய ஊரக வேலை உறுதி சட்டமும்

–அருணா ராய், நிகில் தே

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் ''தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் – 2'' (என்ஆர்இஜிஏ) என்பதை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இவ்வேளையில், தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் அடிப்படைகள் என்ன என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒரு மக்கள் இயக்கத்திற்கும், கிராமத் தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த தேவைகளுக்கும் அரசியல் ரீதியாக ஈடுகட்டும் வகையில்தான் என்ஆர்ஜிஇஏ உருவானது. இந்தச் சட்டம் மக்களின் வேலை உரிமையை சட்ட வரம்புக்குள் கொண்டுவந்தது. மேம்பாடு என்பதை ஏழைகளும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோரும் பொருளாதார ரீதியாக, சமூகரீதியாக அதிகாரம் பெறுதல் என்பதன் மூலமாக அணுகியது. இதன் இலக்கு தெளிவானது – கோரப்படும்போது வேலை அளிக்கப்பட வேண்டும் என்பதே அந்த இலக்கு. உண்டாக்கப்பட்ட வளங்கள் முதலில் மிக மிக ஏழைகளான, விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகங்களுக்கு உதவிட வேண்டும். இதற்கான பணிகள் வெளிப்படையான முறையில், பதில்சொல்லும் பொறுப்புள்ள வகையில் குறைந்தபட்ச கூலிக்கான வேலைச் சூழல்களை உருவாக்கக்கூடியதாகவும் அத்தகைய சூழல்களைத் தொடர்ந்து பராமரிக்கத்தக்க–தாகவும் அமைய வேண்டும். திட்டங்களும் புதிய செயல்திட்டங்களுமே கூட மக்களால் முன்வைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட வேண்டும். நிதி ஒதுக்கீடுகள் பெருமளவுக்கு அதிகரித்துள்ளதால், கிராம சபைகளும் உள்ளாட்சிகளும் மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தை வளர்க்கும் நிலையைப் பெற்றுள்ளன. மக்களே திட்டமிடுதல் என்பதை வளர்க்க முடியும். கேரளத்தில் நிதியதிகாரம் பரவலாக்கப்பட்டதன் மூலம் அப்படித்தான் நடந்தது.

ஊழல்கள், ஒட்டைகள் பற்றிய குற்றச்சாட்டுகள் ஒருபுறம் இருந்தாலும் கூட, திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில் இருக்கும் பலவீனத்தை இந்தச் சட்டம் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தங்களது கூட்டுத் திறமையை வெளிப்படுத்தவும், அந்த பலவீனத்தைச் சரிசெய்யவும் வழிவகுத்துள்ளது. என்ஆர்இஜிஏவின் சாதனைகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை என்பது உண்மைதான். பல மாநிலங்களில் வேலை அட்டைகளே கூட இன்னமும் முறைப்படி வழங்கப்–படவில்லை. இச்சட்டத்தின் அடித்தளங்கள் இன்னும் வலுவற்றதாகவே இருக்கிறது என்பதால், இதில் செய்யப்படுகிற எந்தவொரு உடனடி மாற்றமும் தற்போது கிடைத்துள்ள சன்னமான வெற்றியை அழித்து விடலாகாது; மாறாக அந்த வெற்றியின் அடிப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதாகவே அமைய வேண்டும். இதில் மிக முக்கியமானது, எந்த ஒரு மாற்றத்தையும் தீவிரமான விவாதமில்லாமல், அந்த விவாதங்களில் சட்டத்தின் அடிப்படை அங்கங்களான மக்களை மையப்படுத்தாமல் கொண்டுவரக்கூடாது.

ஒரு கெடுவாய்ப்பாக முதல் மாற்றம் 2009 ஜூலை 22 அன்று நடந்தேறிவிட்டது. அப்போது என்ஆர்இஜிஏ சட்டத்தின் முதல் அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டு, ''பாசன வசதி, தோட்டக்கலை பண்ணை, நில மேம்பாட்டு வசதிகள் ஆகியவற்றை அட்டவணை சாதிகள் மற்றும் அட்டவணை பழங்குடியினங்களைச் சேர்ந்த குடும்பங்கள் அல்லது வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்கள் அல்லது நிலச்சீர்திருத்தத்தின் பயனாளிகள் அல்லது இந்திய அரசின் இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் பயனாளிகள் அல்லது 2008ஆம் ஆண்டின் விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரணத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி சிறு அல்லது குறு விவசாயிகள் ஆகியோரது நிலங்களுக்கு வழங்க,'' வகைசெய்யப்பட்டது. இதில் பயன்படுத்தப்–பட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் என்ற சொல்லாடலின் அர்த்தம், 5 ஏக்கர் வரையில் விளை நிலம் வைத்திருக்கக்கூடிய எவரும் (80 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் இந்தப் பிரிவின் கீழ்தான் வருகிறார்கள்) தங்கள் நிலங்களில் இந்த வசதிகளைப் பெறத் தகுதியுடையவர்கள் என்பதுதான்.

பெருந்தன்மையான திருத்தம் போல் போலியாகக் காட்சியளிக்கும் இந்தத் திருத்தம், இப்படிப்பட்ட மானியங்களின் மையமான இலக்குக்கு உரியவர்கள் என்ற தலித்துகளும் ஏழைகளும்தான் என்ற நிலையை மாற்றுகிறது. அதன் மூலம், என்ஆர்இஜிஏ சட்டத்தின் அடிப்படைத் திசைவழியையே இந்தத் திருத்தம் மாற்றிவிடக்கூடும். ஆனால் இந்தத் திருத்தம் எவ்விதமான பொதுக் கலந்தாலோசனையோ விவாதமோ இல்லாமலே செய்யப்பட்டுவிட்டது. சொல்லப்போனால், மத்திய வேலை உறுதி மன்றத்தின் (ஜிஇஜிசி) ஆய்வுக்குக்கூட இந்த சட்டத்திருத்தம் முன் வைக்கப்படவில்லை. இதனால் ஏற்படக்கூடிய விளைவு எத்தகையதாக இருக்கும்?

பல்வேறு குறைபாடுகளும் தவறுகளும் இருந்தபோதிலும் கூட, என்ஆர்இஜிஏ சட்டத்தின் கீழ் ஓரளவுக்கேனும் கிடைத்த பலன்கள் கிராமங்களைச் சேர்ந்த மிக மிக ஏழைகளாக இருப்போருக்கும், மிகவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோருக்கும் ஒரு முக்கிய ஆதரவுக் கட்டமைப்பாக அமைந்து வந்துள்ளன. எட்டு வகையான உடலுழைப்பு வேலைகளைச் செய்ய முன்வருகிற எல்லோருக்கும் கூலியுடன் கூடிய வேலை கிடைக்கிறது. இந்த எட்டுவகையான வேலைகளில் பெரும்பாலானவை, தங்களது வாழ்வாதாரத்துக்காக இப்படிப்பட்ட சமூகச் சொத்துக்களையே பெரிதும் சார்ந்திருக்கிறவர்களின் இயற்கை வள அடித்தளத்தை வலுப்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

**இதுவரையில், தலித்துகளிலும் ஏழை விவசாயிகளிலும் ஒரு சிறு பகுதியினருக்குத்தான் வேலை தரப்பட்டு வந்துள்ளது.**

என்ஆர்இஜிஏ வேலைத்தலங்களில் வேலை செய்யும் சிறு, குறு விவசாயிகளின் கூட்டங்களில், சட்டத்தில் செய்யப் பட்டுள்ள திருத்தம் இதனை நில உடைமையாளர்களாக உள்ள விவசாயிகளின் கைகளில் சிக்கவைத்துவிடும் என்று எல்லோருமே ஒரே குரலாகக் கூறினார்கள். மேலும், பொது நிலத்தில் இந்த வேலைகள் கூட்டாக நடைபெறும் என்பதற்கு மாறாகத் தனிப்பட்டவர்களின் நிலங்களில் வேலைகள் நடைபெறும் என்று மாற்றப்பட்டிருப்பதால், என்ஆர்இஜிஏ சட்டம் செயலாக்கப்படுவதில் தற்போதுள்ள வலுவான வெளிப்–படைத்தன்மையும், பதில்சொல்லக் கடமைப்பட்டுள்ள தன்மையும் சீர்குலையும் என்ற அச்சமும் அந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. தலித்துகளும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள விவசாயிகளும் தங்களது தனிப்பட்ட எதிர்ப்பை இன்னும் கூர்மையாக வெளிப்படுத்தினார்கள். அவர்களில் ஒருவர், ‘‘இந்தச் சட்டத்தின் மூலமாக இப்போதுதான் எங்களுக்கு ஏதோ கொஞ்சமாவது கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. அதையும் எங்களிடமிருந்து எப்படியாவது தட்டிப்பறிப்பதற்கு எல்லோரும் வழி கண்டுபிடிக்க விரும்புகிறார்கள் என்பதுபோல் தெரிகிறது. இதனால் தலித்துகளும் ஏழை விவசாயிகளும் வெளியேற்றப்பட்டுவிடுவார்கள். நிலமற்றவர்கள் நிலவுடைமையாளர்களின் நிலங்களை மேம்படுத்தித் தருமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள்,’’ என்று அவர்கள் கூறினார்.

இதுவரையில், தலித்துகளிலும் ஏழை விவசாயிகளிலும் ஒரு சிறு பகுதியினருக்குத்தான் வேலை தரப்பட்டு வந்துள்ளது. முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவர்கள் இன்னும் முழுமையாக இச்சட்டத்தின் கீழ் பயனடையவில்லை. இந்த நிலையில் சட்டத்தின் கீழ் மற்றவர்களையும் கொண்டுவந்து சட்டத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுசெல்வது என்பதில் எந்த நியாயமும் இல்லை.

2009 ஆகஸ்ட் 20 அன்று தில்லியின் விஞ்ஞான் பவன் அரங்கில் நடந்த கூட்டத்தில் பேசிய மத்திய ஊரக மேம்பாட்டுத துறை அமைச்சர் சி.பி. ஜோஷி, ‘‘கலந்துரையாடலையும் விவாதங்களையும் மாற்றுக் கருத்துக்களையும்’’ தமது அமைச்சகம் வரவேற்கிறது என்று சொன்னார். சட்டத்திருத்தத்திற்கு வந்த எதிர்ப்புகளைப் பதிவுசெய்துகொண்ட அவர், இதனால் தலித்துகளும் ஏழைகளும் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதை மனதில் கொண்டு இந்தத் திருத்தம் செயல்படுத்தப்படாமல் நிறுத்திவைக்கப்படும் என்று அறிவித்தார். அது வரவேற்கத் தக்கதே. ஆனால், முதல் பிரிவைச் சேர்ந்த நிலங்கள் பக்குவப்படுத்தப்படுகிற வரையில் இந்த சட்டத்திருத்தமே திரும்பப்பெறப்பட்டாக வேண்டும் அல்லது இடைக்காலமாக நீக்கப்பட்டாக வேண்டும்.

என்ஆர்இஜிஏ சட்டத்திற்கு எதிராக மற்றொரு வாதம் முன்வைக்கப்படுகிறது. விவசாய வேலைக்கு அதிகக் கூலி தரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் விவசாயம் செய்வது என்பதையே இந்தச் சட்டம் கஷ்டமானதாக்–கிவிட்டது என்று வாதிடப்படுகிறது. இந்த விமர்சனத்தை உண்மையில் என்ஆர்இஜிஏ சட்டத்திற்குக் கிடைத்த ஒரு வலுவான அங்கீகாரமாகவே கருதவேண்டும். ஏழையிலும் ஏழையாக இருப்போரை ஆதரிப்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. கிராமப்புறத் தொழிலாளர்களின் பேரம் பேசும் சக்தியை இந்தச் சட்டம் அதிகரித்துள்ளது என்பதையே இந்த விமர்சனம் உணர்த்துகிறது.

விவசாயிகளின் பிரச்சனையை எப்படிக் கையாள்வது? விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டும், இந்தியாவில் விவசாயம் நம்பகமான தொழில்தான் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள துயரங்களைப் போக்கவும், அதன் ஆற்றலைப் பெருக்கவும் விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். விவசாய விளைபொருள்களுக்கு நல்ல ஆதரவு விலை வழங்குவது, பன்னாட்டு வர்த்தகங்கள் தொடர்பாக பகுத்தறிவுக்கு உகந்த கொள்கைகளை உருவாக்குவது, ஒவ்வொரு வயல் பகுதியிலும் விவசாயக் குளம் அமைத்தல், சிறப்பான கடன் கொள்கைகள், செயலூக்கமுள்ள விவசாயக் காப்பீடு உள்ளிட்ட சிறப்புத் திட்டங்கள், விவசாய மீட்பு நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகள்

தேவை. கடன், வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகியவற்றை விவசாயிகளின் நீண்ட கால நலன்களை மனதில் கொண்டு மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஆனால், விவசாயிகளுக்கு உதவுவதற்காக, விவசாய வேலைகளுக்குக் குறைவான கூலி கொடுப்பது, இந்திய கிராமங்களில் மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்காக என ஏற்படுத்தப்பட்ட வாய்ப்புகளில் மற்றவர்களுக்கும் பங்குபோட்டுத் தருவது என்றெல்லாம் விவசாயிகளுக்கு சலுகை வழங்குவது என்பது நியாயமற்ற வழிமுறையாகும். விவசாயிகளின் நியாயமான கவலைகள் தனியாகக் கையாளப்பட வேண்டியவை. சிக்கலிலிருந்து கிராமப் பொருளாதாரத்தை மீட்கிற ஒட்டுமொத்த சுமையை ஒரு சிறு வெற்றியை ஈட்டியுள்ள வேலைவாய்ப்புத் திட்டத்தின் தலையில் சுமத்திவிடக்கூடாது.

வறட்சியின் அபாயங்கள் மிகப்பெரிதாக உருவாகிக் கொண்டிருக்கும் தருணத்தில் உரிய நேரத்தில் வேலையும் கூலியும் தரப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். நாட்டிலேயே முதல் முறையாக பொருளாதார உரிமைகளையும் சமூக உரிமைகளையும் ஒரு சட்டப்பூர்வ கட்டமைப்புக்குள் கொண்டு வந்தது என்ஆர்இஜிஏ சட்டம்தான். ஏழை குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையே இந்த அடிப்படைக் கூறுகளின் மேல் இத்தகைய ஒரு உறவை ஏற்படுத்தியது தான் என்ஆர்இஜிஏ சட்டத்தின் அழுத்தமான பதிவு.

இந்த அடித்தளம் வலுப்படுத்தப்படுவதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும். அதன் பிறகே என்ஆர்இஜிஏ–இரண்டாம் கட்டத்தை கவனமாக தொடங்க வேண்டும். குடிமக்களில் ஒருவர் இச்சட்டத்தின் கீழ் தனக்கு 15 நாட்கள் வேலை தரவேண்டும் என கோரலாம், 15 நாட்களுக்குள் கூலி வழங்கக் கோரலாம், குறைபாடுகளுக்கு 7 நாட்களில் தீர்வு காணக் கோரலாம். இதற்கெல்லாம் சட்டத்தில் வலுவான விதிகள் உள்ளன. இக்கோரிக்கைகள் ஏற்கப்படாதபோது தொழிலாளர்கள் தங்களுக்கு வேலையில்லாக்கால உதவித் தொகை, இழப்பீடு ஆகியவற்றை வழங்கவும், கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறியதற்கு அபராதம் விதிக்கவும் வலியுறுத்த முடியும். அரசாங்கம் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்கள் என்றெல்லாம் ஒட்டு வேலை செய்வதை விட்டுவிட்டு, முதலில் நாடு முழுவதும் தொழிலாளர்களின் இப்படிப்பட்ட கோரிக்கைகளை அரசு முதலில் செயலூக்கத்துடன் நிறைவேற்றிக் காட்டட்டும். சாமான்ய குடிமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே உறவு என்பது என் ஆர் இ ஜி ஏ சட்டத்திற்கான பாதை மட்டுமல்ல ஒரு ஜனநாயக ஆட்சிக்கான பாதையுமாகும். (அருணா ராய், நிகில் தே இருவரும் சமூகப் பணியாளர்கள்).

**– The Hindu, July 2009**

## உள்ளாட்சி வருவாய் பெருக்க மாநில நிதி ஆணையம் நியமனம்

தமிழக அரசு வெளியிட்ட உத்தரவு: இந்திய அரசியலமைப்பு சட்டம் 243ம் பிரிவின்படி சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி மாநகராட்சி சட்டங்களின்படி, 4ம் மாநில நிதி ஆணையத்தை கவர்னர் பர்னாலா நியமித்துள்ளார். ஆணைய தலைவராக க.பணீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்., உறுப்பினர்களாக முன்னாள் எம்.எல்.ஏ செ.ராமலிங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குனர், பேரூராட்சிகள் இயக்குனர், உறுப்பினர் செயலராக ரீட்டர் ஹரிஷ் தக்கர் ஐ.ஏ.எஸ்., ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களின் பதவிக் காலம் 2011ம் ஆண்டு மே 31ம் தேதி வரை ஆகும்.

மாநில அரசு விதிக்கும் வரி, தீர்வை, சுங்கங்கள், கட்டணங்கள் நிகர வருவாயை மாநில அரசுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், உள்ளாட்சி அமைப்புகள் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய வரி, தீர்வை, சுங்கம், கட்டணம் ஆகியவற்றை தீர்மானித்தல், மாநில அரசு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்களை நிர்ணயித்தல், ஊரக, நகர்ப்பகுதி, உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரம் பெருக்கும் புதிய வாய்ப்புகள் ஆகியவை குறித்து ஆணையம் ஆய்வு செய்து பரிந்துரைகளை தர வேண்டும். 2012ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதியிலிருந்து 5 ஆண்டுகளுக்கு பொருந்தும் வகையில், 2011ம் ஆண்டு மே 31ம் தேதிக்குள் ஆணையம் அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வாறு அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

**– தினகரன், 3.12.2009**

# பசியை ஒழித்துவிடுமா உணவு உரிமைச் சட்டம்?

–அ. மார்க்ஸ்

கல்வி உரிமைச் சட்டத்திற்குப் பிறகு இப்போது உணவு உரிமைச் சட்டம் விவாதத்திற்கு வந்துள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு – II ன் அடுத்த நூறு நாள் சாதனைகளில் ஒன்றாக இதன் நகல் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது (இணையத்தளங்களில் பார்க்க). முன்னதாக காங்கிரஸ் கட்சி தனது சமீபத்திய நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தது. பின்பு குடியரசுத் தலைவரின் உரையிலும் இது குறிப்பிடப்பட்டது. அப்புறம் இப்படியான ஒரு சட்டம் வேண்டுமென மன்மோகனுக்கு சோனியா கடிதம் எழுதினார். (சொடுக்கினால் ஓடிவரக் காத்திருக்கும் மன்மோகனுக்குக் கடிதமா என்கிறீர்களா? எல்லாம் ஒரு பந்தாதான்). ஆக இப்போது நகல் வெளியிடப்பட்டுவிட்டது. எல்லாவற்றையும் 'பாதுகாப்பு' என்கிற சொல்லாடலுக்குள் கொண்டுவருவது செப்டம்பர் 11, 2001க்குப் பிந்திய அரசியலாகிவிட்டது. அந்த வகையில் இச்சட்டத்தின் பெயர் 'தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்'. இந்தச் சட்டத்தின் மூலம் அப்படி என்ன உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது என முதலில் பார்க்கலாம். வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள குடும்பங்கள் எல்லாவற்றிற்கும் மாதம் 25 கிலோ அரிசி/கோதுமை; கிலோ 3.ரூ விலைக்குத் தரப்படுமாம். காங்கிரஸ் கட்சித் தேர்தல் அறிக்கையிலும் இது தான் சொல்லப்பட்டிருந்தது. ஆக இது எல்லோருக்குமான திட்டம் அல்ல. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே பயனளிக்கப்போகிறது.

அதனாலென்ன அவர்களுக்குத்தானே இது தேவை என நாம் நினைத்துவிடக்கூடாது. இதற்குப் பின் ஒரு அரசியல் இருக்கிறது. 'எல்லோருக்கும் கல்வி', 'எல்லோருக்கும் மருத்துவம்', 'எல்லோருக்கும் உணவு' என்பதெல்லாம் 1990களுக்கு முந்திய முழக்கங்கள். உலகமயத்திற்குப் பின் 'எல்லோருக்கும்' என்கிற சொல் கைவிடப்பட்டது. கல்வி உரிமை 6 முதல் 14 வயது மட்டுமே பொருந்தும் எனக் கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதை நினைவிற்கொள்ளுங்கள். அதற்கு இணையாகத்தான் இங்கே 'வறுமைக் கோட்டிற்குக் கீழே' என்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. உலக நிதி நிறுவனங்களின் ஆணையை ஏற்று 1997க்குப் பின்தான் குடும்ப அட்டைகள் இப்படி வறுமைக்கோட்டிற்குக் கீழ்/மேல் (BPL/APL) எனப் பிரிக்கப்பட்டன. இதன் மூலம் இன்று இந்தியா முழுவதும் 6.5 கோடி மக்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகக் கணக்கிடப் படுகிறது. இதில் 2.5 கோடிப்பேர் ஏழைகளிலும் ஏழைகள். இவர்கள் அந்த்யோத்யா உணவுத் திட்டத்தின் கீழ் வருகிறார்கள்.

இப்படி உலக நிதி நிறுவனங்களின் ஆணையை ஏற்று பொது வினியோக முறையை (PDS) குறிப்பான மக்களை நோக்கிய (Targetted PDS) வினியோக முறையாக மாற்றியதனால், ஏழை எளிய மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி நான் நான்காண்டுகளுக்கு முன்பே விரிவாக எழுதியுள்ளேன். (பார்க்க: உலகமயத்திற்குப் பின் இந்தியா). கிராமப்புறத்தின் தினசரி ஊதியம் ரூ.11.80க்குக் குறைவாகவும் நகர்ப்புறமானால் ரூ.17.80க்குக் குறைவாகவும் சம்பாதிப்பவர்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாம். கிராமப்புற ஏழை ஒருவர் தினசரி ரூ.12 சம்பாதித்தால் அவர் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர். ஒரு தோசை ரூ.20க்கு விற்கும் இக்காலத்தில் இந்த வரையறை எத்தனை கொடுமையானது. பொருளாதார வல்லுனர் அர்ஜுன் சென் குப்தாவின் தலைமையிலான 'அமைப்பு சாரா தொழில்துறை பற்றிய தேசிய ஆணையம்' இந்த நாட்டில் தினசரி ரூ.20க்கும் குறைவாகச் செலவழிக்கூடிய மனிதர்களின் எண்ணிக்கை 83.6 கோடி எனக் கணக்கிட்டுள்ளது. ஆனால் அரசின் கணக்குப்படி வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் 6.5 கோடி. ஒரு குடும்பத்திற்கு 5 பேர்கள் என அதிகபட்சமாக வைத்துக்கொண்டால் கூட இதன் மூலம் பயன் பெறுபவர்கள் 32 கோடிப்பேர்கள்தான். ஆனால் 20 ரூபாய்கூட தினம் உணவு, மருந்து, வீடு உள்ளிட்ட அனைத்திற்கும் செலவழிக்க இயலாதவர்கள் 84 கோடி பேர். தவிரவும் வறுமை எல்லையிருப்பவர்களை இப்படி நிரந்தரமாக கோட்டுக்குக் கீழே மேலே எனப்பிரிக்க இயலாது. அட்டை வாங்கும்போது அந்தக் குடும்பத்தில் ஒருவர் வேலையில் இருந்திருக்கலாம். அப்புறம் அவர் வேலையை இழந்திருக்கலாம். இப்படிப் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே தான் சொல்கிறோம் இப்படி பொது வினியோக முறையை வ.கோட்டிற்கு மேலே/கீழே எனப் பிரிக்கக்கூடாது. அல்லது குறைந்தபட்சம் அர்ஜுன் சென் குப்தா ஆணையம் சொல்வது போல தினசரி 20 ரூபாய்க்குக் குறைவாகச் செலவழிக்கும் 84 கோடிப் பேருக்காவது திட்டம் விரிவாக்கப்பட வேண்டும்.

அடுத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 25 கிலோ தானியம் மட்டுமே வழங்கப்படும் என்கிறது சட்ட நகல். ஏற்கனவே இன்று 35 கிலோ பொது வினியோக முறையில் வழங்கப்படுகிறது. கோதுமை கிலோ ரூ.4.15 எனவும் அரிசி 5.65 எனவும் வழங்கப்படுகிறது. அந்தயோத்யா திட்டத்தில் உள்ளவர்களுக்கு 35 கிலோ தானியம் கிலோ ரூ.2 விலைக்குத் தரப்படுகிறது. உணவு உரிமைச் சட்டத்தின்படி கிலோ ரூ.3 விலையில் 25 கிலோ மட்டுமே தரப்படும். ஒரு சின்ன கணக்கு போடுவோம். தற்போது

சராசரியாகக் கிலோ 4.5 ரூ. விலையில் 35 கிலோ தரப்படுகிறது. அக்குடும்பத்தில் அதற்காகச் செலவழிக்கும் தொகை 35x4.5=157.50; இனி 25 கிலோ தானியத்தை 25x3=75 ரூபாய்க்கு அக்குடும்பம் வாங்கும். மீதமுள்ள 10 கிலோவை அது சந்தையில் கிலோ ரூ10க்கு வாங்குவதாகக் கொண்டால் அக்குடும்பம் அதற்கு இப்போது கூடுதலாக ரூ.100 செலவிடவேண்டும். ஆக மொத்தம் 175 ரூபாய் ஆகிறது. எனவே அறிவிக்கப்பட்டுள்ள உணவு உரிமைச் சட்டம் தற்போது உள்ள நிலையைக் காட்டிலும் ஒரு படி பின்னுக்குப் போகிறதே ஒழிய முன்னே போகவில்லை.

## தவிரவும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு குடிநீர், குறைந்தப்பட்ச சுகாதாரமான சுற்றுச்சூழல், அடிப்படை மருத்துவம் ஆகியவையும் தேவை.

பொது வினியோக முறை அப்படியே நீடிக்கப்படும் எனவும் சட்டம் கூறுகிறது. அதிலுள்ள ஊழல்கள் அனைத்தும் அப்படியே தொடரும். இந்தத் திட்டத்திலுள்ள குறைகளை நீக்கவோ குறைகளுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவோ எந்த வழிமுறைகளும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சட்டங்கள் பொறுப்பானவர்கள் தவறு செய்யும்போது தண்டிக்க வழி இல்லாவிட்டால் பிறகு அச்சட்டத்திற்கு உரிய பயனில்லாமல் போகும். இன்னொன்றும் இங்கே கவனிக்க வேண்டியுள்ளது. மாநிலங்கள் பலவும் ஏற்கனவே இதே 3.ரூ விலை அல்லது அதற்கு கீழே மக்களுக்கு தானியங்களை வழங்கிக்கொண்டுள்ளன. எடுத்துக்–காட்டாக தமிழ்நாட்டில் 10 முதல் 20 கிலோ அரிசி ரூ.1 விலைக்கு அளிக்கப்படுவதை நாம் அறிவோம். சட்டிஸ்கரில் 70 சத மக்கள் தொகையினருக்கு ரூ.2 விலையில் 35 கிலோ தானியம் வழங்கப்படுகிறது. அந்த்யோத்யா குடும்பங்களுக்கு இது 1 ரூ. விலையில் தரப்படுகிறது. அங்கே எல்லா பழங்குடி குடும்பங்களும், ஆண் துணை இல்லாக் குடும்பங்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகக் கருதப்படுகிறது. அருகிலுள்ள கேரளத்திலும் கூட எல்லா தலித் குடும்பங்களும், பழங்குடி குடும்பங்களும் வ.கோட்டுக்குக் கீழுள்ளவர்களாகக் கருதப்படுகிறது. மே.வங்கம், பிஹார் மாநிலங்களில் உள்ள வரையறையின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளோர் மத்திய அரசு வரையறையின் படி கணக்கிடுவதைக் காட்டிலும் 40 சத அளவு அதிகமாக உள்ளனர்.

சமூக ஏற்றத் தாழ்வுகள் உள்ள நமது நாட்டில் உணவுப் பாதுகாப்பு என்பதை வெறுமனே தினசரிக் கூலி அடிப்படையில் மட்டும் நிர்ணயிக்காமல் எல்லா தலித் மற்றும் பழங்குடியினரையும் பொது வினியோக முறையால் பயனடைபவர்களாக அறிவிப்பது அவசியம். தலித் இயக்கங்கள் இதைக் கணக்கில் கொள்ள வேண்டும். மாத ரேஷனை 35 கிலோவுக்குக் கீழாக குறைக் கக்கூடாது. மொத்த மக்கள் தொகையில் 11 சதத்திற்கும் அதிகமான மக்கள் பயனடையும்போது மத்திய அரசு அந்தச் செலவை ஏற்பதில்லை. சட்டிஸ்கர் அரசு 70 சதம் மக்களுக்கு மானிய விலையில் தானியம் அளிக்கிற–தென்றால் மீதி 54 சதம் மக்களுக்கு அது சொந்தச் செலவில் கொடுக்க வேண்டும். எனவே இந்த 11 சதவரையறையும் விரிவாக்க வேண்டும். உணவுப் பாதுகாப்பு, பசி ஒழிப்பு என்பதன் வரையறை மிகவும் விரிவானது. சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்கிற அளவிற்கு சத்துணவு கிடைக்கும்போதே ஒருவரைப் பசியற்றவராக நாம் கருத முடியும். வெறும் 35 கிலோ தானியத்தை வழங்குவதன்மூலம் அக்குடும்ப உறுப்பினர்களுக்கும் சத்துணவு கிடைத்துவிடாது. போதிய அளவு புரோட்டீன் மற்றும் கொழுப்புச் சத்து தேவை. எனவே உணவுப் பாதுகாப்பு என்பதில் குறைந்த பட்சம் 5 கிலோ பருப்பு, 3 கிலோ சமையல் எண்ணெய் முதலியவையும் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

தவிரவும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு குடிநீர், குறைந்தப்பட்ச சுகாதாரமான சுற்றுச்சூழல், அடிப்படை மருத்துவம் ஆகியவையும் தேவை. இவையும் உணவுப் பாதுகாப்பிற்குள் வருகிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது. உலக அளவில் பஞ்சம், பட்டினிச்சாவு ஆகியவற்றைமிக விரிவாக ஆய்வு செய்துள்ள அறிஞர் அமார்த்ய சென் சொல்வது போல எந்தப் பட்டினிச் சாவு அல்லது பஞ்சங்களின் போதும் நாட்டில் போதிய உணவுப் பொருள் இல்லாமலில்லை. போதிய உணவுப் பொருட்கள் இருந்தும அதை வாங்குவதற்கு மக்கள் வக்கற்று இருப்பதன் விளைவே பஞ்சமும், பட்டினிச்சாவுகளும். 1859 பஞ்ச ஆணைய அறிக்கையிலும் இது குறிப்பிடப்பட்டது. ஆண்டவனே எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அளியுங்கள் என கிறிஸ்தவர்கள் வேண்டுகிறார்களே, அந்த ரொட்டித் துண்டை, சோற்றை வழங்கும் உண்மையான ஆண்டவன் யார் ? –வேலை, ஆம் வேலை வாய்ப்பு தான் சோறு போடுகிறது. காந்தியடிகள் கூட பசியோடு இருப்பவனின் கடவுள் வேலைதான் என்றார்.

இந்த வேலையையும், வேலைக்கு அடிப்படையான கல்வியையும் உத்தரவாதம் செய்யாமல் வெறுமனே உணவு உற்பத்தியை பெருக்குவதோ, இறக்குமதி செய்வதோ இல்லை படி அரிசித்திட்டம் முதலானவற்றின் மூலமாக மட்டுமே உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்திவிட இயலாது. எனவே கல்வி, மருத்துவம், வேலை, உணவு, குடிநீர், ஆரோக்கியமான சூழல் ஆகிய உரிமைகள் தனித்தனியானவை அல்ல. அவை ஒரே கொத்தாக அமைந்தவை. தனித்தனியே பிரிக்க இயலாதவை. வேலை செய்யும் வயதில் உள்ளோருக்கு வேலைவாய்ப்பு

மட்டுமின்றி முதியோர் மற்றும் விதவைக்கு ஒய்வூதியம், 5 வயதுவரை ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தை நலப் பாதுகாப்பு பிறந்த 11 மாதம் வரை நல்ல தாய்ப்பால் கிடைக்கும் வண்ணம் தாய்க்குச் சத்துணவு–இவை எல்லாம் சேர்ந்தது தான் உணவுப் பாதுகாப்பு.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (NREGS) என்பது விவசாயத்துடன் இணைக்கப்படுதல், ஆண்டுக்கு நூறு நாள் வேலை என்பதை படிப்படியாக 200 நாள், 300 நாள் வரை விரிவாக்குதல், தினசரி ஊதியத்தை ரூ.100 ஆக உயர்த்துதல் முதலியனவும் இணைக்கப்படும்போதே உணவு உரிமைச் சட்டம் பொருளுடையதாக இருக்கும். இதெல்லாம் கொஞ்சம் 'ஓவரா' தெரியுதே என நினைத்தீர்களானால் உலக அளவில் இது குறித்து நடைபெறும் விவாதங்கள், அரசின் கடமைகள், குடிமக்கள் உரிமைகள் குறித்து நாம் அறியாதவர்களாக உள்ளோம் என்பதே அதன் பொருள்.

எப்படி உன்னிகிருஷ்ணன் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் விளைவாக அரசு இன்று கல்வி உரிமைச் சட்டம் இயற்றியுள்ளதோ அதேபோல் உணவு உரிமைச்சட்டத்தின் பின்னும் உச்ச நீதிமன்ற வழக்கு ஒன்று உள்ளது. 2001ம் ஆண்டில் ராஜஸ்தானில் பெரும் பஞ்சம். அதே சமயத்தில் அரசிடம் ஏராளமான தானிய இருப்பு இருந்தது. உடனடியாக அதை மக்களுக்கு வழங்க வேண்டும் என ராஜஸ்தான் மாநில பி.யூ.சி.எல் அமைப்பு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. உணவு உரிமைப் பிரச்சாரமும் இவற்றுடன் இணைக்கப்பட்டது. மத்திய மாநில அரசுகள் இந்திய உணவு கார்ப்பரேஷன் முதலியவற்றிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டது. அரசியல் சட்டத்தின் 21ம் பிரிவின்படி உள்ள வாழ்வுரிமை என்பது உணவு உரிமையையும் உள்ளடக்கும் எனவும், பஞ்ச காலங்களில் உணவுப்பாதுகாப்பைச் செயல்படுத்த இயலாததற்கு அரசு நிதியைக் காரணமாகச் சொல்லக் கூடாது எனவும் முந்தைய உச்ச நீதிமன்றத்தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு நோக்கில் பல வகையிலான சத்துணவு தொடர்பான திட்டங்களை நிறைவேற்றி வருவதாக அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டது. அவை: 1) ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் (ICDS), 2) மதிய உணவுத் திட்டம், 3) குறிப்பிட்ட மக்களை நோக்கிய பொது வினியோகத்திட்டம், 4) அந்த்யோத்யா உணவுத்திட்டம், 5) தேசிய முதியோர் ஒய்வூதியத்திட்டம், 6) தேசிய கர்ப்பிணிப்பெண்கள் நலத் திட்டம், 7) தேசிய குடும்ப நலத்திட்டம் முதலியன. உச்ச நீதிமன்றம் இவை அனைத்தையும் சட்டபூர்வமான உரிமைகளாக அறிவித்தது குழந்தை வளர்ச்சித் திட்டம், மதிய உணவுத் திட்டம் முதலியவற்றை அனைத்துக் குழந்தைகளுக்கும் விரிவுப்படுத்துமாறு ஆணையிட்டது. இந்தத் திட்டங்கள் சரியாகச் செயல்படுகிறதா எனக் கண்காணிக்கும் உரிமையை கிராம நிர்வாகங்களுக்கு அளித்தது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் நீதிமன்றத்திற்குத் தெரியாமல் அரசு நிறுத்தக் கூடாது என்றும் ஆணையிட்டது. இவை சரியாக நிறைவேற்றப்படுகிறதா எனக் கண்காணிக்க அமைப்பொன்றையும் உருவாக்கியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க நீதிமன்ற நடவடிக்கை இது. எட்டு ஆண்டுகளாகியும் தீர்ப்பு வழங்கப்படாவிட்டாலும் நீதிமன்றக் கண்காணிப்புடன் திட்டங்கள் தொடர்கின்றன. ஏனவே நாம் அதிகப்படியான கோரிக்கைகளை வைப்பதாக கருத வேண்டியதில்லை.

நமது அரசியல் சட்டத்தில் கல்வி மற்றும் உணவு உரிமை தொடர்பான சட்டங்கள் வழிகாட்டு நெறிமுறைகளிலேயே (பிரிவு 45, 47) உள்ளன. ஆவற்றை நிபந்தனையற்ற அடிப்படை உரிமைகளாக மாற்றுவதற்கும் நாம் போராட வேண்டும். 2009–10 நிதி நிலை அறிக்கையின்படி மதிய உணவுத் திட்டத்திற்கு 8000 கோடி, ஒருங்கிணைக்கப்–பட்ட குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 6026 கோடி, ஓய்வூதியத்திட்டத்திற்கு 6523 கோடி, குறிப்பிட்ட மக்களை நோக்கிய பொது வினியோகத் திட்டத்திற்கு 43,627 கோடி ஆக மொத்தம் ரூ.64,176 கோடி செலவிடப்பட்டது. நாம் மேலே கூறியுள்ளவாறு இவற்றை விரிவாக்கும்போது ரூ.1,30,000 கோடி வரை ஆகலாம். பாதுகாப்புக்கு ரூ.1,50,000 கோடிவரை செலவு செய்யும் போது ஏன் மக்களின் பசி தீர்க்க இதைச் செய்யக்கூடாது ?

**– மக்கள் களம், நவம்பர் 2009**

## ஊராட்சித் தலைவரை அறையில் வைத்து பூட்டியதால் பரபரப்பு

மூன்றாண்டுகளாக மக்கள் குறை கேட்க வராத ஊராட்சித் தலைவரை அறையில் பூட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது. கடலூர் மாவட்டம், பண்ரூட்டி அடுத்த கீழ்கவரப்பட்டு ஊராட்சியில், மன்ற உறுப்பினர்களின் கூட்டம், நேற்று காலை நடந்தது. ஊராட்சி மன்றத்தலைவர் சக்கரத்தாழ்வார் தலைமை தாங்கினார். ஊராட்சி உதவியாளர் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டம் துவங்கியதும் அப்பகுதி மக்கள் திரண்டு வந்து, 'வார்டு பகுதிகளில் சுகாதார வசதி செய்து தர வில்லை; தெருவிளக்கு வசதி இல்லை; கடந்த மூன்றாண்டுகளாக ஊராட்சி கூட்டம் நடத்தாமல், ஊராட்சி தலைவர் வீட்டில் கூட்டம் நடக்கிறது, கிராம சபை கூட்டம் நடக்கவில்லை' என அடுக்கடுக்காக பல்வேறு புகார்களை எழுப்பினர். இதற்கு ஊராட்சிமன்றத் தலைவர் பதில் கூறாததால், ஆத்திரம் அடைந்த அப்பகுதிமக்கள், கூட்டம் நடந்து கொண்டிருந்த அறைக்கதவை பகல் 12 மணிக்கு பூட்டினர். அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கிராம பிரமுகர்கள் பேச்சு வார்த்தைக்குப் பின், ஒரு மணிக்கு பூட்டை திறந்து விட்டனர்.

**– 8.1.10, தினமலர்**

# புதுச்சேரி மாநிலத்தில் உள்ளாட்சிகள் – ஒரு பார்வை

– கோ.அ.ஜெகநாதன் தலைவர்,
புதுச்சேரி உள்ளாட்சிகளின் கூட்டமைப்பு

73வது அரசியல் சாசன திருத்தச்சட்டப்படி பஞ்சாயத்துக்கள் துறை, மாநில அரசு அதிகாரம்பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டு, பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. இதன் விளைவாக தற்போது பஞ்சாயத்துகள் குறித்து மத்திய அரசும், மாநில அரசும் தனித்தனியே சட்டங்கள் இயற்றி இரண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**அதிகாரப் பரவலாக்கம் குறித்து அரிச்சுவடி கூட தெரியாத மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் என்பது விந்தையான விரோதமான தேர்தலாக மாநில அரசு பிரதிநிதிகளால் பார்க்க முடிகிறது.**

73–வது திருத்தம் – முக்கிய அம்சங்கள் மூன்றுச் சட்டங்கள் ஆகும். 1. சுயாட்சி (self–Root), 2. சமூக நீதி (Social Justice), 3. கிராம வளர்ச்சி (Rural Development) உள்ளிட்டவைகள் ஆகும். கடந்த 38 வருடங்களாக இருந்த நிலைமாறிட வேண்டியும், தேர்தல் நடத்திடக்கோரியும் 2004 –2005 பாராளுமன்றத்தில் புதுச்சேரியின் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களின் ஜனநாயக குரல் ஒலித்தது.

2005 – 2006 ஆண்டில் சமூக ஆர்வலர் மற்றும் பொது நல இயக்கங்கள் வழக்கு தொடுத்ததின் காரணமாக, சென்னை உயர்நீதி மன்றம் தேர்தலை நடத்திட உத்தரவு போட்டது. 2006 சூன் – சூலை மாதங்களில், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம், மாகி ஆகிய பகுதிகளில் உள்ளாட்சி தேர்தல் நடந்தது. இதன் மூலம் 1138 கிராம பஞ்சாயத்து தலைவர், கவுன்சிலர், வார்டு உறுப்பினர்கள் என அடித்தளத்து மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர். 2006 ஜுலை மாதம் 12ஆம் தேதி முதல் ஒருவார காலம் பதவியேற்பு நிகழ்ச்சிகள் நடந்தது அரசமைப்பு சட்டப்படி உறுதியேற்புடன் பதவி ஏற்பு விழா நடந்தது.

அதிகாரப் பரவலாக்கம் குறித்து அரிச்சுவடி கூட தெரியாத மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் என்பது விந்தையான விரோதமான தேர்தலாக மாநில அரசு பிரதிநிதிகளால் பார்க்க முடிகிறது. உள்ளாட்சிகளுக்கு சட்டப்படியான உரிமைகள் மற்றும் நீதிகள் அளிக்க கோரியும், 73–வது சாசன சட்டத் திருத்தம், மாநில அரசால் மசோதா ஆக்க வேண்டியும், மக்களவை உறப்பினர் தலைமையில், மாநில முழுவதும் இருந்து 5000 பேர் பங்கேற்ற உண்ணாநிலை 2006 நவம்பர், 6–ஆம் தேதி நடைபெற்றது. இதன் விளைவாக 2006 டிசம்பர் 15 மற்றும் 18 ஆகிய தேதிகளில் சட்ட மசோதா, சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தீர்மானமாக நிறைவேறியது. புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து சட்டம் 1973–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. 2006 ஆம் ஆண்டு கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து சட்டம் (திருத்தம்) மற்றும் 2006 ஆம் ஆண்டு கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து சட்டம் (திருத்தம்) மற்றும் 2006 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டம் (திருத்தம்) கொண்டுவந்து கிடப்பில் போட்டது.

2006 செப்டம்பர் 27–ந் தேதி கிராம பஞ்சாயத்து கூட்டமைப்பும், அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி கொம்யூன் கவுன்சிலர் கூட்டமைப்பும், அக்டோபர் 25 ஆம் நாள் நகரமன்ற கவுன்சிலர் கூட்டமைப்பும் துவக்கப்பட்டது. 2006 நவம்பர் 4ஆம் நாள் உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்கும் முடிவை அரசு அறிவிக்க கோரியும், அதற்கான அரசாணை வெளியிட வலியுறுத்தியும், செய்தி ஊடகங்கள் மூலம் அரசுக்கு மக்களவை உறுப்பினரால் அறிவுறுத்தப்பட்டது. 2006 நவம்பர் 4–ஆம் நாள் புதுச்சேரி ஆளுநர் திரு.முகத்மிதியை மககளவை உறுப்பினர் பேராசிரியர் தலைமையில் உள்ளாட்சிகளின் கூட்டமைப்பு நிர்வாகிகள் சந்தித்து மனு அளித்தனர். மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களின் உறுதிமிக்க ஆதரவு மற்றும் போராட்ட இயக்கங்களால் புதுச்சேரி அரசியல் கட்சிகள் மத்தியில் உள்ளாட்சி அமைப்புகளை ஆதரிக்கும் செய்திகள் ஊடகங்களில் வரத்துவங்கின. குறிப்பாக பா.ஜ.க., தே.மு.தி.க., சி.பி.ஜ.எம்.எல்,பி.எஸ்.பி., தி.மு.க.ம.தி.முக. மற்றும் அமைப்புகள் ஆதரவு அளிக்கத் தொடங்கினர்.

2006 ஆம் ஆண்டு இறுதியில், மூன்று அரசாணைகள் வெளியிடப்பட்டது. நிதி, பணியாளர் மற்றும் பயணப்படிகள் உள்ளிட்டவைகள் ஆகும். ஆனால் மேற்கண்ட ஆணைகள் பெரும் பகுதி அதிகாரமின்றி தானாகவே செத்துவிட்டது.

2007 ஜனவரி மாதம் 11–ஆம் தேதி மக்களவை உறுப்பினரின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றின் பலனாக மத்திய பஞ்சாயத்து ராஜ்அமைச்சர் திரு.மணிசங்கர் அய்யரும், மற்றும் மாநில முதல்வர் திரு.இரங்கசாமியும் கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரகம் வழங்கும் பரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளாட்சி

பிரதிநிதிகளின் முன்னிலையில் கையெழுத்தானது. இதற்கான நிகழ்ச்சியில் அன்றைய முதல்வர் வருவதற்கு இழுத்தடிப்பு செய்தார். இந்த ஒப்பந்தம் வெறும் ஏட்டிலேயே நடைமுறை படுத்தப்படாமல் உள்ளது. 2007, மார்ச் – 15ம் தேதி அன்று கிராம பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பினர் மாநிலம் தழுவிய முழு அடைப்பு போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தை விளக்கி மக்களிடையே துண்டறிக்கை வினியோகம் செய்து பரப்புரை செய்யப்பட்டது. மேலும் மாநில அரசு பிரதிநிதிகளையும், அவர்களது அதிகார பரவலாக்கத்திற்கு எதிரான நடவடிக்கையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. 2007, ஜீன் 22–ந் தேதி, வில்லியனூர், தனலட்சுமி திருமண நிலையத்தில் நடைபெற்ற கிராம பஞ்சாயத்து கூட்டமைப்பு ஆலோசனைக்கூட்டத்தில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

2007, ஜுலை 12ம் தேதி அன்று, தமிழ்நாடு ஸ்ரீபெரும்புதூரில் பஞ்சாயத்து ராஜ்சட்டத்தை உருவாக்கிய அமரர் ராஜீவ்காந்தி அவர்களின் நினைவிடத்தில் கிராம பஞ்சாயத்து கூட்டமைப்பு உண்ணாநிலை மேற்கொண்டது. மேற்கண்ட உண்ணாநிலைக்கு மக்களவை உறுப்பினர் பேராசிரியர் வாழ்த்து தெரிவித்திருந்தார். 2007 ஜுலை 10ம் தேதி அன்று மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களால் தனது கைப்பட உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்கக்கோரி அன்றைய ஆளுநர் மற்றும் முதல்வர் ஆகியோருக்கு தனித்தனியாக கடிதம் எழுதப்பட்டது.

மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களின் சீரிய முயற்சிகளினால் 2007, ஆகஸ்ட்–1 அன்று காமராஜர் கல்வி வளாகத்தில் முதல்வர் தலைமையில் உள்ளாட்சி பிரதிநிகள் குறிப்பாக கிராம பஞ்சாயத்து தலைவர்கள் முன்னிலையில் பங்கேற்ற கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர், உள்ளாட்சி அமைச்சர், செயலர், இயக்குனர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குனர் ஆகியோர் பங்கேற்ற கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தை கூட்டுவதற்கு மக்களவை உறுப்பினர் பேராசிரியர் பெரும்முயற்சி எடுத்தார்.

2007, சூலை 10ம் தேதி அன்று கிராம பஞ்சாயத்து தலைவர் கூட்டமைப்பு, கொம்யூன் கவுன்சிலர் கூட்டமைப்பு மற்றும் நகரமன்ற கூட்டமைப்பு ஆகியவைகளுக்கு ஒருங்கிணைப்பு பேராசிரியர் அவர்களால் செய்யப்பட்டது. 2007, ஆகஸ்ட் 14ம் தேதி அன்று ஆரம்ப பள்ளிகளுக்கான கல்விகுழுவின் தலைவர்களாக கிராம பஞ்சாயத்து தலைவர்கள் பொறுப்பேற்க மக்களவை உறுப்பினர் அவர்களின் வழிகாட்டுதலால் சர்வ சிக்ஷா அபியன் திட்டம் புதுச்சேரியில் கொண்டுவரப்பட்டது. 2007, செப்டம்பர் முதல் வாரத்தில் புதுச்சேரி உள்ளாட்சி கூட்டமைப்புகளை அழைத்துச் சென்று பெரும் முயற்சி எடுத்து மேதகு குடியரசுத்தலைவர், பாரதப்பிரதமர், உள்துறை அமைச்சர், பஞ்சாயத்து ராஜ்அமைச்சர், ஊரக அமைச்சர் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் ஆகியோரை சந்தித்ததுடன் ஐக்கிய முற்போக்கு கூட்டணித்தலைவர் திருமதி. சோனியாகாந்தியையும் சந்தித்து புதுச்சேரியில் உள்ளாட்சிகளுக்கு உரிய அதிகாரம் மற்றும் உரிமைகள் வழங்கப்படாததை புகாராக தயார்செய்து மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களால் அளிக்கப்பட்டது.

பஞ்சாயத்து அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட வலியுறுத்தி கர்நாடக முன்னாள் ஆளுநர் திருமதி. ரமாதேவியின் பரிந்துரை மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டது குறித்து ஆலோசனைக்கூட்டம் செப்டம்பர் 28ம் தேதி அன்று ஜே.வி.ஆர். அரங்கில் நடைபெற்றது. இதில் ரமாதேவியின் பரிந்துரையான பஞ்சாயத்துகளுக்கு தன்னாட்சி அதிகாரம் குறித்து மக்களவை உறுப்பினர் பேராசிரியர் உரைநிகழ்த்தினார். 2007, செப்டம்பர் 11ம் தேதி அன்று, உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்காத அரசை கண்டித்து செய்தி ஊடகங்களுக்கு மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்.

2008, மே மாதம் 7–ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களால் புதுச்சேரி உள்ளாட்சிகளுக்கு நிதிஒதுக்கீடு, அதிகாரம் மற்றம் உரிமைகள் வழங்க வலியுறுத்தி கவனஈர்ப்பு தீர்மான கோரிக்கை விடுத்தார். 2008, அக்டோபர் 2ம் தேதி அன்று கிராமங்களில் அடிப்படை வசதிகள் இல்லாததற்கு காரணம் உள்ளாட்சிகளுக்கு நிதியும், அதிகாரம் வழங்காதது ஏன் என கரிக்கலாம்பாக்கம் கிராம சபை கூட்டத்தில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் மேற்கொள் காட்டி உரைநிகழ்த்தினார்.

புதுச்சேரியில் சட்டப்படி உள்ளாட்சிகளுக்கு துறை வாரியாக அதிகாரங்கள் மற்றும் பணிகள் வழங்கிட வலியுறுத்தி முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு.மு.இராமநாதன் தலைமையில் குழு அமைக்கப்படவும், நிதிகள் பகிர்ந்தளிக்க வணிகவரித்துறை ஆணையர் திரு.இராமதாசு தலைமையில் குழுவும் அமைக்க தனது குரலை அப்பழுக்கற்றமுறையில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் வெளிப்படுத்தினார். கிராம பஞ்சாயத்து உள்ளிட்ட அடித்தளத்து ஜனநாயக அமைப்புகளுக்கு பயிற்சி வழங்கவேண்டி புதுச்சேரி அரசையும், திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழகத்தையும் பரிந்துணர்வு ஒப்பந்த;ம செய்ய மக்களவை உறுப்பினர் பேராசிரியர் நெருக்கடி ஏற்படுத்தினார்.

2008, ஜனவரி 7ம் தேதி அன்று புதுச்சேரி ஜே.வி.ஆர் அரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அக்

கூட்டத்தில் குடியரசுத்தினத்தன்று உள்ளாட்சி பிரதி நிதிகள் இல்லங்களில் கருப்புக் கொடி ஏற்ற முடிவு செய்யப்பட்டது. மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் தலையிட்டு தனது அறிவாற்றல் மற்றும் அனுபவம் மூலம் அப்போராட்டத்தை கைவிடச் செய்ததுடன் வேறு வடிவங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார். 2008, மார்ச் 15ம் தேதி அன்று உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் மற்றும் உரிமைகள் வழங்காத புதுச்சேரி அரசை கண்டித்து கண்டன ஊர்வலமும், பெருந்திரள் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. இவ்வியக்கத்தில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் பங்கேற்று தனது ஆதரவை வெளிப்படுத்தினர். 2008, ஏப்ரல் 5ம் தேதி அன்று மக்களவை உறுப்பினர் பேராசிரியல் தலைமையில் உள்ளாட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் புதுச்சேரி ஆளுநர் திரு.போபிந்தர் சிங்கை சந்தித்து மனு கொடுத்தனர். 2008, மே 4ம் தேதி அன்று உள்ளாட்சிகளுக்கு, புதுச்சேரி அரசு அதிகாரம் வழங்காவிட்டால் பாராளுமன்ற மூலம் அரசுக்கு நெருக்கடி கொடுப்பேன் என மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் செய்தி ஊடகங்கள் மூலம் அரசுக்கு நெருக்கடி கொடுத்தார்.

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் – 2005 புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நடைமுறைப்படுத்த மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் முயற்சி மேற் கொண்டார். இதன் விளைவாக இத்திட்டம் காரைக்காலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. புதுச்சேரியில் மூன்று கிராமங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்ததினால் மேற்கண்ட திட்டம் தேர்தலுக்குப்பின்னர் தொடரும் வாய்ப்புள்ளது. மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களது இடைவிடாது போராட்டம் மூலம் புதுச்சேரியில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டது. இதனால் சில மாற்றங்கள் உள்ளாட்சிகளில் நிகழவாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை உருவானது. மத்திய அமைச்சர் மணிசங்கர் அய்யரையும், மாநில ஆளுநரையும், மாநில முதல்வரையும் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரையும் சந்திக்க வைத்து சில பணிகளை உள்ளாட்சிகளுக்கு வழங்கச் செய்தார்.

2008, அக்டோபர் 29ம் தேதி அன்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.நமச்சிவாயத்தை சந்தித்து பேசவும், உரிய அதிகாரங்கள் வழங்கிடவும் முயற்சி மேற்கொண்டார். இச்சந்திப்பின்போது மூன்று கூட்டமைப்பு பிரதி நிதிகளையும் அழைத்துச் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். 2008, டிசம்பர் 9ம் தேதி அன்று கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கான பேரிடர் மேலாண்மை கருத்தரங்கம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிலரங்கில் மக்களவை உறுப்பினர் பேராசிரியர் பங்கேற்று உரைநிகழ்த்தினார். 2009, ஜனவரி 7ம் தேதி அன்று அதிகாரம் வழங்காத மாநில அரசை கண்டித்து சட்டமன்றம் முற்றுகை போராட்டம் நடத்த முடிவு எடுக்கப்பட்டதை உணர்ந்த மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் மாநில அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி சில அதிகார பகிர்வுகளை வழங்கச் செய்யும் அரசாணைகளை வெளியிடச் செய்தார். 2009, ஜனவரி 5ம் தேதி அன்று கிராம பஞ்சாயத்துகளுக்கு 22 பணிகள் வழங்கும் அரசாணை அரசால் வெளியிடப்பட்டது. இதற்கு முழு முதற்காரணம் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் பேராசிரியர் அவர்களின் தொடர் நடவடிக்கை மற்றும் விடாமுயற்சி ஆகியவைகளில் பயனாக அரசு பணிந்து ஆணை வெளியிட்டது.

*Paper Circulated at the consultation on Status of Panchayat Government in Tamil Nadu, 24th & 25th March 2009, Organised by Human Rights Foundation.*

### பதவி நீக்கம் செய்த விவகாரம்

## ஊராட்சி தலைவர் அப்பீல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

பதவி நீக்கம் செய்யப்பட்ட கோட்டைக்குப்பம் ஊராட்சி தலைவரின் மேல்முறையீடு மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், கோட்டைக்குப்பம் ஊராட்சி தலைவர் மேரி ஸ்டெல்லா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது: ஊராட்சி பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தேன். இதற்காக மிரட்டி பணம் வாங்கியதாக, என் மீது குற்றம் சுமத்தினர். என்னிடம் விளக்கம் கேட்காமல் பதவியில் இருந்து நீக்கி, கலெக்டர் உத்தரவிட்டார். கலெக்டர் உத்தரவை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்தேன். பஞ்சாயத்து ராஜ்மற்றும் கிராம முன்னேற்ற செயலர் விசாரணை நடத்தினார். ஆனால், எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. பதவி நீக்க உத்தரவுக்கு விளக்கம் அளிக்க திருவள்ளூர் கலெக்டருக்கு கடிதம் அனுப்பினார். இதை ரத்து செய்ய வேண்டும். எனது மேல்முறையீடு மனு மீது உரிய உத்தரவு பிறப்பிக்க செயலருக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளார். இந்த வழக்கை நீதிபதி ஜோதிமணி விசாரித்தார். மனுதாரர் சார்பில் வக்கீல் குமாரதேவன் ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதி, ''மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீது முடிவு அறிவிக்காமல், கலெக்டருக்கு கடிதம் அனுப்பியது தவறு. அதை ரத்து செய்கிறேன். மனுதாரரின் மேல்முறையீடு மனு மீது விரைவில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார்.

**– 3.1.2010, தினகரன்**

# தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் – 2005 தமிழகத்தில் ஊராட்சிகள் சந்திக்கும் சவால்கள்

– T. இரவீந்திரன், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் AIAWU - TN

இந்திய நாட்டின் வறுமையை ஒழிப்பதற்காக கடந்த 40 ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு 13 வேலை வாய்ப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தி அமுலாக்கப்பட்டு ஆட்சியாளர்கள், அதிகாரிகள், ஒப்பந்ததகாரர்களின் முக்கூட்டு கொள்ளை திட்டங்களாக உருமாறியது இப்பின்னணியில் பசியற்ற இந்தியாவை உருவாக்கிட சமுக வளர்ச்சி எதிர் நோக்கும் அரசியல் இயக்கங்களும் சமுதாய அமைப்புகளும் நீண்ட நெடுங்காலமாக கோரிவந்த அடிப்படையில் 5.09.2005ம் தேதி அன்று இந்திய பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கி கடந்த 02.02.2006 முதல் செயல்பட்டு வரும் தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் – 2005 கடந்த 3 ஆண்டுகளாக நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்ட செயல் ஆக்கத்தால் உன்னத நோக்கங்கள் வெற்றி பெற வாய்ப்புகள் உருவாகி வருவதும் சவால்களை எதிர் கொள்ள நேரிடும் நிலையும் ஏற்பட்டு வருகிறது. கிராமபுற மக்களுக்க அடிப்படையாக உள்ள ஜனநாயக உரிமையை வழங்கி ஆளுமையை வலுபடுத்தும் இச்சட்ட உரிமைகளை இலக்கு பயனாளிகளுக்கு அமுலாக்க வேண்டிய மிக பெரும் பங்கு கிராம ஊராட்சியின் செயலாக்க அலுவலர்களே. உரிமைகளை வழங்கிட உறுதியான பலம் வாய்ந்த நிர்வாக கட்டமைப்பு மிக அவசியம். இதனை உத்திரவாதப்படுத்த வேண்டிய மத்திய, மாநில அரசுகள் கடந்த காலங்களில் இருந்த சடங்கு பூர்வ அமுலாக்க நடவடிக்கைகளையே இச்சிறப்பு மிகு திட்டத்திலும் கொண்டு உள்ளதால் ஊராட்சிகள் சந்திக்கும் சவால்களை விவாதிப்பதும் விடிவு காண்பதும் அவசர அவசிய தேவை ஆகும்.

## சட்ட உரிமை குறித்த விழிப்புணர்வு

ஊரக பகுதியில் செயலாக்கப்படும் அனைத்து மக்கள் நல திட்டங்களும் அரசு நிர்வாகம் வழங்குவதை பெற கூடியவராக தான் மக்கள் உள்ளனர். ஆனால் இச்சட்டத்தில் வேலை தரும்படி உரிமை கோரவும், வேலை வழங்கியே தீர வேண்டும் என்ற கடமையை அரசு நிர்வாகம் செயல்படுத்தவும் வழி ஏற்படுத்தி உள்ளது, வேலை பெறுவது சட்ட பூர்வஉரிமையாகிறது. வேலை வழங்குவது உள்ளிட்ட அனைத்து செயலாக்கங்கள் குறித்து செய்திகளை பயனாளிகளுக்கு கொண்டு செல்ல உரிய அழுத்தம் கொடுக்கப்படவில்லை. இதனால் வேலை கோரும் உரிமையை மறுத்து மாநில அரசுகளின் விருப்பம்போல் தீர்மானித்து செயல்படுத்தும் நிலை உள்ளது இதன் வளர்ச்சி வேலை வழங்குவதையே வார்டுவாரியாக சுழற்சி முறையில் அமுலாக்கும் ஜனநாயாக படு கொலையாக செய்ய நேரிடும் அளவிற்கு சென்றுள்ளது.

## செயலாக்க கட்டமைப்பு

ஒரு திட்டம் எவ்வளவு பெரிய நோக்கங்களை கொண்டிருந்தாலும் அதன் செயலாக்கத்தில் பொது மக்கள் பங்கேற்பை உறுதிபடுத்தும் செயலாக்க கட்டமைப்பு உரிய பலமாக இருந்தால் தான் வெற்றியை காண முடியும். இத்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட அளவில் தனி திட்டஅலுவலர் வட்டார அளவில் ஊழியர்கள் என்பதை உறுதிபடுத்த சட்ட திட்டத்தில் ஏற்பாடு செய்து விதிமீறல் முறைகேடுகளுக்கு வட்டார, மாவட்ட அலுவலர்கள் பொறுப்பாக்கி தண்டிப்பது தவிர்க்கப்படும் பாராபட்சத்தை கண்டித்திட வேண்டி உள்ளது.

## சம்பளம்:

அட்டவணை I பிரிவு 6ல் எந்தஒரு சூழ்நிலையிலும் குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறைவாக தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடாது என்கிறது. பிரிவு 7ல் எப்போது ஊதியமானது வேலை அளவு இணைக்கப்படுகிறதோ அப்போது மாநில அரசானது மாநில வேலை உறுதி குழுமத்தை கலந்தாலோசித்து ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு வேலையின் தன்மைக்கும் ஏற்ற ஊதிய அட்டவணையை தயாரித்து அந்தந்த அடிப்படையில் ஊதியம் வழங்கும் (தமிழ்நாடு அரசு ஊதிய அட்டவணையை 2008ஆம் ஆண்டு அறிவித்துவிட்டு பின்னர் மாநில வேலை உறுதி குழுவின் ஒப்புதல் பெற்றது) பிரிவு 8ல் தனித்திறனற்ற தொழிலாளர்களுக்கான ஊதியம் அவ்வாறான ஊதிய அட்டவணைகளின்படி நிர்ணயிக்கப்படும் போது சாதாரணமாக ஒரு நபர் 7 மணிநேரம் வேலைசெய்தால் குறைந்தபட்ச ஊதியத்திற்கு சமமான தொகையை பெறும்வகையில் ஊதிய அட்டவணை தயாரிக்கப்படவேண்டும் என்கிறது.

தமிழகத்தில் வேலை உறுதித்திட்ட வேலையில் 82% பெண்கள் ஈடுபடுகின்றனர். இவர்களும் ஆண்கள் செய்யவேண்டிய அளவிற்கே வேலை செய்யவேண்டும். ஆனால் மேற்கு வங்கம், ஆந்திரா, பீகார் போன்ற மாநிலங்களில் ஆண்களின் அளவை விட 15% குறைவாக பெண்கள் வேலை அளவு விகிதம் அறிவிக்கப்பட்டுள்ளது. திரிபுராவில் வயதானவர்களுக்கு (80 வயது) தனி அளவு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இத்தகைய தளர்வு உருவாக்கிடவேண்டும்.

**மொத்தத்தில் வெளிப்படையான நிர்வாகம் சமூக கண்காணிப்பு, பொறுப்பாண்மைகளை அனைத்து மட்டங்களிலும் உருவாக்கி வெற்றிக்கு வித்திட அனைவரும் குரல் எழுப்பிட வேண்டும்.**

வேளாண் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட ரூ80/– சம்பளம், ஆனால் நேரம் மட்டும் அதனை பின்பற்றாமல் கூடுதலாக 1 மணி நேரம் இருப்பது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது.

**சமூக பாதுகாப்பு:**

பணியின்போது ஏற்பாடும் விபத்துக்களில் ஊனமுற்றாலோ, உடலுழைக்க தகுதியிழப்பு ஏற்பட்டாலோ நிவாரணம் அறிவித்திட வலியுறுத்த வேண்டும். மத்திய அரசு அறிவித்துள்ள ஜன்பீமா யோஜனா ஆயுள் காப்பீடு திட்டத்தின்மூலம் வருடத்தில் 15 நாட்கள் வேலை செய்த தொழிலாளர்களுக்கு மத்திய அரசு ரூ.100 + மாநில அரசோ அல்லது தொழிலாளியோ ரூ.100 = ஆக மொத்தம் ரூ.200/– வருடாந்திர பிரிமியம் கட்டி சலுகைகளை பெறும் எவ்வித முயற்சிகளையும் கடந்த 8 மாதங்களாக (15.7.2008) எடுக்கப்படவில்லை. மொத்தத்தில் வெளிப்படையான நிர்வாகம் சமூக கண்காணிப்பு, பொறுப்பாண்மைகளை அனைத்து மட்டங்களிலும் உருவாக்கி வெற்றிக்கு வித்திட அனைவரும் குரல் எழுப்பிட வேண்டும்.

***Paper Circulated at the consultation on Status of Panchayat Government in Tamil Nadu, 24th & 25th March 2009, Organised by Human Rights Foundation.***

## 6 உள்ளாட்சிகளில் ரூ.120 கோடி தகுதியற்ற செலவு

### கணக்குத் தணிக்கை அதிகாரி பேட்டி

தமிழகத்தில் உள்ள 6 மாவட்டங்கள் வளர்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.120 கோடி நிதியை வேறு திட்டக்ளுக்குப் பயன்படுத்தியுள்ளன. இதை இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 2007–08ம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைத் தணிக்கை செய்த இந்திய தணிக்கைத் துறை அது தொடர்பான அறிக்கையை அளித்தது. இந்த அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் திங்கள் கிழமை தாக்கல் செய்யப்பட்டது. இதில் உள்ள அம்சங்கள் குறித்து தமிழகம், புதுச்சேரியின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் சங்கர நாராயணன் செய்தியாளர்களுக்கு செவ்வாயன்று பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியது:

கோவை, ஈரோடு, மதுரை, பெரம்பலூர், சிவகங்கை மற்றும் நீலகிரி ஆகிய ஆறு மாவட்டங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதியற்ற இனங்களுக்கு திட்டச் செலவிலிருந்து நிதி எடுத்து செலவழித்துள்ளனர். அதன் மூலம் சாதனைகள் உயர்த்திக் காட்டப்பட்டுள்ளன. தகுதியற்ற இனங்கள் வரிசையில் இலவச வண்ணத் தொலைகாட்சி பெட்டி வழங்குதல், இலவச எரிவாயு அடுப்பு வழங்குதல் ஆகியவற்றை தணிக்கையாளர்கள் பட்டியலிட்டுள்ளனர். 2006–08ம் ஆண்டு காலத்தில் ஓய்வூதியம் மற்றும் கடன், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான ஒதுக்கீட்டுக்கு மானியம் ஆகியன சாதனைகளாக தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது. ஆனால் இது எந்த வகையிலும் பயனளிக்காத, அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தாத செலவினங்களாகும். இந்த வகையில் ரூ.120.98 கோடி தகுதியற்ற செலவுகளை இந்த ஆறு மாவட்டங்களும் செய்துள்ளன. 2006–ம் ஆண்டு திமுக அரசு ஆட்சிக்கு வந்ததும் மாநிலத்தின் 12,618 ஊராட்சிகளிலும் ஐந்தாண்டு காலத்தில் உள் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு கணிசமான வள ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளில இத்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் படி ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் ரூ.15 லட்சத்தை குட்டைகள், ஊரணிகள், மீன் குட்டைகள், சந்தைகள் போன்ற கிராமக் குழுவால் தேர்வு செய்யப்படும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். எஞ்சிய ரூ.5லட்சத்தில் இதர பணிகளை மேற் கொள்ளவேண்டும். ஆனால் இந்த ஆறு மாவட்டங்களும் நிதியை வருவாய் தராத, கட்டமைப்பை மேம்படுத்தாத திட்டங்களுக்கு செலவிட்டுள்ளனர் என்று சங்கர நர்ராயணன் குறிப்பிட்டார்.

**– தீக்கதிர், 14.1.2010**

# உள்ளாட்சியும் தொழிலாளர்களும்

– டி.ஆர்.எஸ். மணி

தமிழ் நாட்டில் சென்னை மற்றும் 8 மாநகராட்சிகளும், 150 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும், 12,618 ஊராட்சிகளும் உள்ளன. மாநகராட்சிகளிலும் நகராட்சிகளிலும் 80 ஆயிரம் ஊழியர்களும், ஊராட்சிகளில் 50 ஆயிரம் பணியாளர்களும் பதிலி, தினக்கூலி, தொகுப்பூதியம் என்ற வகையில் பணியாற்றுகின்றனர். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டின் கணக்குப்படி 6 கோடியே 21 லட்சத்து 8 ஆயிரம் ஆகும். நகர்புறத்து மக்களின் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட 40 சதவீதம் வார்டுகளின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. நகரமும், நகராட்சிகளின் மக்கள் தொகை அதிகரித்து இருந்தும் பொது சுகாதாரத்தை பாதுகாக்க ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருமளவு குறைந்து உள்ளது. சென்னை நகரத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த 24,000 தொழிலாளர்கள் தற்போது 13 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பெரும்பாலும் தலித் மக்களே ஈடுபடுத்தப்படும் இந்தத் தொழிலில் இவர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாம். 1942ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 'நார்ம்ஸ்' கமிட்டியின் அடிப்படையில் 1000 மக்களுக்கு ஒருவர் அல்லது 1 மைலுக்கு மேற்படாத தூரத்துக்கு துப்புரவுப்பணியாளர் ஒருவர் தேவை. பொதுக்கழிவறைக்கு ஒன்றுக்கு ஒருவர், வீடுகளில் உள்ள கழிவறைகள் 40க்கு ஒருவர் வீதம் பணியாளர் நியமிக்கப்பட வேண்டும். தெருக்களில் குவிக்கப்பட்ட குப்பைக் கூளத்தை அள்ளி அகற்றுவதற்கு ஆன வண்டியொன்றுக்கு இருவர் நியமிக்கப்பட வேண்டும். சாக்கடை துப்புரவு பணிக்கு 1000 அடிக்கு ஒருவர் அமர்த்தப்படவேண்டும். இந்தப் பணி விகிதங்கள் எதுவும் 1970ம் ஆண்டிற்கு பிறகு கடைப்பிடிக்கப் படவில்லை.

1973ம் ஆண்டு வரை நகராட்சிகள், மாநகராட்சிகளில் பணிபுரியும் இவர்களின் சம்பள விகிதம் ரூ.15ம் பஞ்சப்படி ரூ.98ம் சேர்த்து வெறும் 103 மட்டுமே பெற்று வந்தனர். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட வலிமையான இயக்கத்தின் பின்புதான் 1–10–73 முதல் இவர்களுக்கு நான்காம் பிரிவு அரசு ஊழியர்களுக்குச் சமமான சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பில் ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான மின்பம்புகளை இயக்குபவர்கள், துப்புறவுப் பணியாளர்கள், காவலர்கள் அடங்க மாட்டார்கள். இவர்களின் மாத ஊதியமே ரூ.600/–தான். இதுவும் நீண்ட நெடிய போராட்டத்திற்கு பிறகு 2004ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டதுதான். தற்போதைய பொறுப்புவகிக்கும் அமைச்சருடன் பல முறை நேரில் சந்தித்தும் மாற்றம் இல்லை. இன்றைய முதல்வரிடமும் முறையிடப்பட்டது விடிவு இல்லை.

**“நாதியற்ற நிலைமையையும், இயலாமையும் உள்ள நபரிடமிருந்து உழைப்பைச் சுரண்டி குறைந்தபட்ச ஊதியத்தைவிட குறைவான ஊதியத்தை அரசு அளிப்பது என்பதை அனுமதிக்கவே முடியாது.”**

ஊராட்சிகளின் பொறுப்பாளர்கள் ஒன்றை திருப்பித் திருப்பிக் கூறுவார்கள். எங்களிடம் நிதியில்லை, நிதியில்லை என்று இதில் நியாயம் இருக்கலாம்? ஒன்றியமோ, ஊராட்சிகளோ தங்கள் பகுதியின் வளர்ச்சிக்குத் திட்டமிடும்போதே பணியாளர்களின் தேவையையும், ஊதியத்தையும் கணக்கிலெடுத்து நிதி வசதி பெறவேண்டும். எந்த வளர்ச்சியும் மனித முகமில்லாதும், மனித உழைப்பும் இல்லாது பூர்த்தியடைய முடியாது. 1994ம் ஆண்டு குஜராத் மாநிலத்தின் சூரத் நகர் “பிளேக்” என்னும் கடும் தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்களின் இறப்பினால் சோகத்தில் உள்ளாக்கப்பட்டது மறக்க முடியாத ஒன்று. காரணம், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நகரம் குப்பைகள் அள்ளாததினால் எலிகளின் தொந்தரவினால் பரவிவிட்ட கடும் நோய். இங்கு ஒருபாடம். பாதிக்கப்பட்ட உச்சவேளையில் எந்ததனியார் மருத்துவமனையும் இயங்கவில்லை. அங்குள்ள அனைத்து பணியாளர்களும், டாக்டர், நர்சுகள் உள்பட நகரத்தை விட்டு இவர்களின் வேலையாட்களும் வெளியேறி விட்டனர். யார் உதவியது? தனியார் மயமா? இல்லவே இல்லை. அவ்வூரில் இருந்த சுகாதரத் தொழிலாளர்கள் சடலங்களை அகற்றினர், அதிகமான பாதிப்புக்குள்ளான உயிர் போகாத நிலையிலிருந்து மக்களை அரசு மருத்துவமணையின் செவிலியர்கள், சோர்வடைந்தபோதும் அவர்களை காப்பாற்றினார்கள்.

லாபத்திற்கு செயல்படுபவர்களிடம் இந்த சேவையை எதிர் பார்க்க முடியாது. ஏன், சுனாமியால் பாதிக்கப்பட்டபோதும் தமிழகத்தின் சுகாதாரப் பணியாளர்கள்தான் நாகை, கடலூர், கடற்கரையோரம் குவிந்த சடலங்களை அப்புறப்படுத்த பயன்படுத் தப்பட்டனர்.

சென்னையிலும் ஒனிக்ஸ் ஒப்பந்தம் முடிந்து புதிய ஒப்பந்தக்காரர் நீல்மெட்டல் பனாக்கா பணியேற்க தாமதப்படுத்தியபோது சென்னை மாநகராட்சியின் சுகாதாரப் பணியாளர்கள்தான் காப்பாற்றினார்கள். லாபத்திற்கு செயல்படுபவர்களிடம் இந்த சேவையை எதிர்பார்க்க முடியாது. ஏன், சுனாமியால் பாதிக்கப்பட்ட போதும் தமிழகத்தின் சுகாதாரப் பணியாளர்கள்தான் நாகை, கடலூர், கடற்கரையோரம் குவிந்த சடலங்களை அப்புறப்படுத்த பயன்படுத்தப் பட்டனர். சென்னையிலும் ஒனிக்ஸ் ஒப்பந்தம் முடிந்து புதிய ஒப்பந்தக்காரர் நீல்மெட்டல் பனாக்கா பணியேற்க தாமதப்படுத்தியபோது சென்னை மாநகராட்சியின் சுகாதாரப் பணியாளர்கள் தான் காப்பாற்றினர்கள். எனவே தான் உள்ளாட்சி நிறுவனங்கள் தனியார் மயம் மூலம் நிவாரணம் காண நினைத்தால் மேற்கூறிய இடர்பாடுகளை சந்திக்க நேரிடும்.

"Right to Life" என்ற அரசியல் அமைப்பு சட்டப் பிரிவு 21 கொடுத்துள்ள உரிமையை உள்ளாட்சி அமைப்புகள் பறித்து விட முயற்சிக்கக் கூடாது. "நாதியற்ற நிலைமையையும், இயலாமையும் உள்ள நபரிடம் இருந்து உழைப்பைச் சுரண்டி குறைந்த பட்ச ஊதியத்தை விட குறைவான ஊதியத்தை அரசு அளிப்பது என்பதை அனுமதிக்கவே முடியாது." என நீதிபதிகள் பிஎன். பகவதியும் ஆர்.எஸ்.பதக்கும் அளித்த தீர்ப்பை நினைவில் வைக்க வேண்டும். ஊரும் ஊரை நிர்வகிக்கும் ஊராட்சி மன்றங்களும் ஊர் மக்களின், ஊரின் வளர்ச்சி ஆகியவைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளும் வேளையில் கிராமபுறங்களில் வாழும் பெருவாரியான தாழ்த்தப்பட்டவர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். எனவேதான் தேசப்பிதாமகாத்மா காந்தி சொன்னதோடு நிறுத்திக் கொள்கிறோன். "மீண்டும் நான் பிறக்க மாட்டேன். அப்படி பிறவியே ஏற்பட்டாலும் நான் துப்புரவுத் தொழிலாளியின் குடும்பத்திலேயே பிறக்க வேண்டும் என்பது என் ஆசை. அப்போது தான், மனிதாபிமானமற்ற, சுகாதாரமற்ற, வெறுக்க தக்க முறையில் மலம் அள்ளும் தொழிலிருந்து இம்மனிதர்களை விடுவிக்க முடியும்."

*Paper Circulated at the consultation on Status of Panchayat Government in Tamil Nadu, 24th & 25th March 2009, Organised by Human Rights Foundation.*

## பதவி நீக்கம் செய்த விவகாரம் ஊராட்சி தலைவர் அப்பீல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

பதவி நீக்கம் செய்யப்பட்ட கோட்டைக்குப்பம் ஊராட்சி தலைவரின் மேல் முறையீடு மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், கோட்டைக்குப்பம் ஊராட்சி தலைவர் மேரி ஸ்டெல்லா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது: ஊராட்சி பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தேன். இதற்காக மிரட்டி பணம் வாங்கியதாக, என் மீது குற்றம் சுமத்தினர். என்னிடம் விளக்கம் கேட்காமல் பதவியில் இருந்து நீக்கி, கலெக்டர் உத்தரவிட்டார். கலெக்டர் உத்தரவை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்தேன். பஞ்சாயத்து ராஜ்மற்றும் கிராம முன்னேற்ற செயலர் விசாரணை நடத்தினார். ஆனால், எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. பதவி நீக்க உத்தரவும் பிறப்பிக்கவில்லை. பதவி நீக்க உத்தரவுக்கு விளக்கம் அளிக்க திருவள்ளூர் கலெக்டருக்கு கடிதம் அனுப்பினார். இதை ரத்து செய்ய வேண்டும். எனது மேல்முறையீடு மனு மீது உரிய உத்தரவு பிறப்பிக்க செயலருக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார். இந்த வழக்கை நீதிபதி ஜோதிமணி விசாரித்தார். மனுதாரர் சார்பில் வக்கீல் குமாரதேவன் ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதி, "மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீது முடிவு அறிவிக்காமல், கலெக்டருக்கு கடிதம் அனுப்பியது தவறு. ஆதை ரத்து செய்கிறேன். மனுதாரரின் மேல்முறையீடு மனு மீது விரைவில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்". என்று உத்தரவிட்டார்.

**– தினகரன், 3.1.2010**

# தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பு உருவாக்குவதற்கான கலந்துரையாடல் கூட்டம், 28.7.2009

பல்வேறு ஒன்றிய, மாவட்ட அளவில் உள்ள கூட்டமைப்பு, காஞ்சிபுரம் மாவட்ட தலித் தலைவர்களின் கூட்டமைப்புச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களான தாங்கள் 28.07.2009 அன்று திருச்சியில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களுக்கான கூட்டமைப்பு உருவாக்குவதற்கான கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த ஊராட்சித் தலைவர்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு & புதுச்சேரியை உருவாக்கியுள்ளோம். மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசாங்கங்களிடம் ஊராட்சி தொடர்பான பொதுவான கோரிக்கைகளுக்காக ஒரு மாநில அளவிலான கூட்டமைப்பு மிக அவசியம் என்று 14 மாவட்டத்தின் ஒன்றிய, ஊராட்சிமன்றத் தலைவர்களின் கூட்டமைப்பின்யங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் முடிவு செய்தனர். பிற ஒன்றியங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள கூட்டமைப்புகளை இணைப்பதன் மூலம் இந்தக் கூட்டமைப்பை வலுப்படுத்தவேண்டும் என்றும் கூட்டமைப்பு முடிவு செய்தது. மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டங்களை நடத்தி பிற அமைப்புகளை கூட்டமைப்பில் இணைக்க மாநிலக் குழு முன்முயற்சி எடுக்கும். வரும் காலத்தில் இந்தக் கூட்டமைப்பில் கிராம ஊராட்சித் தலைவர்கள் மட்டும் இல்லாமல் ஒன்றிய, மாவட்ட, கிராம அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவார்டு உறுப்பினர்களையும், ஒன்றியக் குழு உறுப்பினர்களையும் இணைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டமைப்பு வறுமை ஒழிப்பு, தற்சார்புள்ள சமூகத்திற்காகப் பாடுபடுவர்களுக்கும் நிலம், நீர், பொதுவளங்கள் பாதுகாப்பிற்கான மக்கள் இயங்கங்களுக்கும் ஆதரவு அளிக்கும், வாழிடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுதலுக்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு உதவி செய்யும், சுரண்டலுக்கு எதிராக போராடும் என்று முடிவு செய்யப்பட்டது. கூட்டமைப்பின் உறுப்பினராவதற்கு சாதி, வர்க்கம், பாலினம் மற்றும் அரசியல் கட்சிகளுடனான தொடர்பு ஆகியவை எப்போதும் ஒரு காரணமாக இருக்காது.

### நோக்கங்கள்:

1) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதி அளிக்கப்படுள்ள 29 துறைகளுக்கான அதிகாரங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு மறுக்கப்பட்டுள்ள பல்வேறு உரிமைகளை அடைவதற்காகவும்.
2) ஊராட்சிகளுக்குத் தேவைப்படும் அதிகாரங்களுக்–காக முதல் அரசாங்கம் (ஊராட்சி அரசாங்கம்) இரண்டாவது அரசாங்கத் திடம் (மாநில அரசாங்கம்) ஆதரவு ஆதிரவு திரட்ட/வழக்காடவும்.
3) தலித் ஊராட்சித் தலைவர்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளை களைவதற்–காகவும் அவர்களின் உரிமைகளுக்க போராடவும்,
4) மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு மாநில அரசாங்கத்தை வலியுறுத்தவும்,
5) தமிழகத்தின் அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவும், அரசியல், சாதி, மத வேறுபாடின்றி ஒரு மாநில அளவிலான கூட்டமைப்பு தேவை.

### திட்டம் மற்றும் கோரிக்கை:

1. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243–G பிரிவில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும்.
2. அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும் ஊதியத்தோடு கூடிய சமூகப் பாதுகாப்பு தேவை
3. வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்பவர்கள் பட்டியல், வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் அனைத்திற்கும் பயனாளிகளை தேர்வு செய்வது ஆகியவை ஊராட்சிகளின் மூலமாகத்தான் உறுதி செய்யப்படவேண்டும்.
4. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் பிரிவு 205 நீக்கப்பட வேண்டும்.
5. ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் கிராம ஊராட்சிகளின் பிரதிநிதித்துவம் கண்டிப்பாக வேண்டும்
6. ஊராட்சிகளின் மின்சாரக் கட்டணச் செலவை அரசே ஏற்கவேண்டும் அல்லது மின்சாரக் கட்டணம் ஒரு யூனிட்டிற்கு ரூ 1/– ஆக குறைக்கப்படவேண்டும்.
7. மாவட்ட ஊராட்சிகள் நன்றாக சீரிய முறையில் செயல்படவேண்டும்.

### மாநிலக் குழு

**பெயர்: ஊராட்சித்தலைவர்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு – தமிழ்நாடு & புதுச்சேரி**

பல்வேறு கூட்டமைப்புகள், சங்கங்களைச் சேர்ந்த கீழ்கண்ட ஊராட்சித் தலைவர்கள் முதல் மாநிலக் குழுவிற்குத் தேர்ந்தேடுக்கப்பட்டனர்.

**வடக்கு மண்டலம்:**

1. K.லஷ்மி – வாசுதேவம்பட்டு ஊராட்சி, தலித் தலைவர்கள் கூட்டமைப்பு, திருவண்ணாமலை
2. E. செல்வி – துறிஞ்சிப்பட்டு ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, விழுப்புரம்
3. கோமதி – காரணை ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, காஞ்சிபுரம்
4. D. தேவராஜ் – சிலாவட்டம் ஊராட்சி, தலித் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு, காஞ்சிபுரம்
5. S.இராமகிருஷ்ணன் – தையூர் ஊராட்சி, திருப்போரூர் ஒன்றிய தலித் தலைவர்கள் கூட்டமைப்பு, காஞ்சிபுரம்
6. K.S. குமார் – கூடலூர் ஊராட்சி, லத்தூர் ஒன்றிய தலித் தலைவர்கள் கூட்டமைப்பு, காஞ்சிபுரம்

**தென் மண்டலம்:**

1. P.சண்முகவேல்ராஜ் – மன்னார்கோவில் ஊராட்சி, அம்பாசமுத்திரம் ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, திருநெல்வேலி
2. S. பொற்கொடி – திருப்பணிகரிசல்குளம் ஊராட்சி, மானூர் ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, தமிழக ஊராட்சி அரசங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, திருநெல்வேலி

**கிழக்கு மண்டலம்:**

1. K.K. பாலசுந்தரம் – தாமரைபுலம் ஊராட்சி தலைஞாயிறு ஒன்றிய தலித் தலைவர்கள் கூட்டமைப்பு, நாகப்பட்டினம்
2. R.வசந்தா – மண்டலக்கோட்டை ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, ஒரத்தநாடு ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, தஞ்சாவூர்
3. S. கௌரி – தமிழக ஊராட்சி அரசாங்கத் தலைவர்கள் கூட்டமைப்பு, திருவாரூர், புதுக்குடி ஊராட்சி
4. S.சத்தியசீலன் – மகேந்திரப்பள்ளி ஊராட்சி கொள்ளிடம் ஒன்றியம் தலித் தலைவர்கள் கூட்டமைப்பு, நாகப்பட்டினம்

**மத்திய மண்டலம்:**

1. S. அச்சுதன் – கொணலை ஊராட்சி, மணச்சநல்லூர் ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, திருச்சி
2. A. அனந்தராமன் – அழகிய மணவாளம் ஊராட்சி, மணச்சநல்லூர் ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, திருச்சி
3. ஜேசுமேரி – மைக்கேல் பட்டினம் ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண்தலைவர்கள் கூட்டமைப்பு, இராமநாதபுரம்
4. E.சரோஜா – சுரத்தூர் ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, திருச்சி
5. J. பொன்னுத்தாய் – திருவேங்கடபுரம் ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர் கூட்டமைப்பு, வெம்பக்கோட்டை ஒன்றியம், விருதுநகர்
6. A.ஜெயராக்கினி – இருங்களூர் ஊராட்சி, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு மணச்ச நல்லூர் ஒன்றியத் தலைவர்கள் கூட்டமைப்பு, திருச்சி.

**மற்கு மண்டலம்:**

1. பூங்கொடி – கூடலூர் மேற்கு ஊராட்சி, கரூர் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு, கரூர்
2. K.ராமசாமி – நடந்தை ஊராட்சி, பரமாத்தி ஒன்றியம் ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு, கரூர்
3. V.R. சுகன்யா – வெள்ளிமலைப்பட்டினம் ஊராட்சி தொண்டமுத்தூர் ஒன்றியம் ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு, தமிழக ஊராட்சி பெண் தலைவர்களுக்கான கூட்டமைப்பு, கோவை அனைத்திந்திய உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகள் சங்கம்,
4. S.B. நடராஜன் – நஞ்சுண்டாபுரம் ஊராட்சி, பெரியநாயக்கண்பாளையம் ஒன்றியத், தலைவர்கள் கூட்டமைப்பு, கோவை

**புதுச்சேரி**

1. G.A ஜகந்நாதன் – ஒருங்கிணைந்த ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு, புதுச்சேரி
2. V.ராஜா – ஒருங்கிணைந்த ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பு, புதுச்சேரி
3. M.மனோகர் – மணப்பட்டு ஊராட்சி, புதுச்சேரி
4. M.A. பாலச்சந்தர் – செல்லூர் ஊராட்சி, காரைக்கால்
5. விஜயலஷ்மி – பிள்ளையார் குப்பம் ஊராட்சி, புதுச்சேரி

**கீழ்கண்ட முடிவுகளோடு கூட்டம் நிறைவுற்றது:**

1. பிற ஒன்றிய மற்றும் மாவட்டத்தில் உள்ள சங்கங்களை இணைத்து இந்தக் கூட்டமைப்பை பலப்படுத்துவது
2. எதிர்கால நடவடிக்கைகள் / செயல் திட்டங்களைப்பற்றி விவாதிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சென்னையில் கூடி பத்திரிக்கையாளர்களை சந்திப்பது.

# சென்னை மாநகராட்சி பரப்பு விரிகிறது

**9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள், 25 ஊராட்சி மாநகராட்சி எல்லைக்குள் இணைகின்றன**

சென்னை மாநகராட்சியுடன் திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர் உட்பட ஒன்பது நகராட்சிகள், எட்டு பேரூரட்சிகள், 25 ஊராட்சிகளைச் சேர்த்து, மாநகராட்சி பரப்பளவை விரிவாக்கம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி, தற்போது 174 சதுர கி.மீ., பரப்பளவில் அமைந்துள்ளது. சென்னை மாநகரின் தற்போதைய எல்லை, 1978ம் ஆண்டு, அதாவது 30 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது.

சென்னை பெருநகர் பகுதி வேகமாக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் தேவைகளை கருத்தில் கொண்டு, தரமான சாலைகள், குடிநீர் வழங்கலுதல், தெரு விளக்குகள், கழிவு நீர் அகற்றுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி வரும் சேவைகளின் நிலை பெருமளவில் வேறுபடுகின்றன. மேலும், மாநகருக்கு அருகில் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, தற்போதைய சென்னை மாநகராட்சிப் பகுதியை விரிவாக்க வேண்டியது அவசியம் என அரசு கருதியது.

மாநகராட்சிகள் அமைப்பது குறித்து, ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை வழங்க, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும துணைத் தலைவரைத் தலைவராகவும், வருவாய் நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக செயலர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது விரிவான அறிக்கையை கடந்த ஜூலை மாதம் அரசிடம் அளித்தது. இதைத் தொடர்ந்து, புதிய மாநகராட்சிகள் அமைப்பது குறித்து, தொடர்புடைய அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசனை நடத்த தாம்பரம், அம்பத்தூர் மற்றும் திருவொற்றியூரில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**முதல் செயற்குறிப்பு:** சென்னை பெருநகரப் பகுதியின் 800 சதுர கி.மீ., பகுதியை உள்ளடக்கும் வகையில், சென்னை மாநகராட்சியின் பரப்பளவை விரிவாக்குதல், இதை 'சென்னைப் பெருநகர மாநகராட்சி' என்று அழைத்தல்.

**இரண்டாவது செயற்குறிப்பு:** திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர் மற்றும் ஆலந்தூர் நகராட்சிகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கி, சென்னை மாநகராட்சியின் பரப்பளவை 426 சதுர கி.மீ.,யாக விரிவாக்கம் செய்தல்; ஆவடி (168 சதுர கி.மீ.,) மற்றும் தாம்பரம் (218 சதுர கி.மீ.,) ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு இரண்டு புதிய மாநகராட்சிகளை உருவாக்குதல். சென்னை மாநகராட்சியுடன் இணைக்க திட்டமிட்டுள்ள பகுதிகள், 'சென்னை' என்ற அடையாளத்தை பெறும். இந்த அடையாளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கியத்துவம் பெறும்.
சென்னை மாநகராட்சி எல்லையை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளில் நகர்ப்புற மயமாக்கலின் வளர்ச்சி வீதம் அதிகமாக உள்ளது. இப்பகுதிகள் அதிக முதலீடுகளை ஈர்க்கும் வகையில் உள்ளன. இந்த முதலீடுகளை வழிமுறைப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும் பெரிய

## இணைக்கப்படும் உள்ளாட்சி அமைப்புகள்

**நகராட்சிகள்:** திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த கத்திவாக்கம், திருவெற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆலந்தூர், உள்ளகரம் – புழுதிவாக்கம்.

**பேரூராட்சிகள்:** திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த சின்ன சேக்காடு, புழல், போரூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நந்தம்பாக்கம், மீனம்பாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர்.

**ஊராட்சிகள்:** திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த இடையஞ்சாவடி, சடையங்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், மாத்தூர் வட பெரும்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், நொளம்பூர், காரம்பாக்கம், நெற்குன்றம், ராமாபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முகலிவாக்கம், மணப்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், மடிப்பாக்கம், ஜல்லடம்பேட்டை, செம்மஞ்சேரி, உத்தண்டி.

உள்ளாட்சி அமைப்புக்கு எளிதாக இருக்கும். இந்தியாவில், நகரங்கள் அவற்றின் மக்கள் தொகை அடிப்படையில் தர வரிசைப்படுத்தப்படுகின்றன. இத்தரப்படுத்துதல் நிதி முதலீடுகளை ஈர்ப்பதிலும் மேலும் நிதி உதவிகளை பெறுவதிலும் முக்கியமாக கருதப்படுகிறது.

இந்த அம்சங்களை எல்லாம் ஆராய்ந்த அரசு, முக்கிய கொள்கை முடிவை எடுத்து உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணை: சென்னை பெருநகர் பகுதியில் மேலும் மாநகராட்சிகளை அமைப்பது குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள இரண்டாவது செயற்குறிப்புக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மாநகராட்சிகளாக, 'சென்னை – ஆவடி, சென்னை – தாம்பரம்' ஆகியவற்றைப் பொறுத்தவரை, முடிவு பின்னர் மேற்கொள்ளப்படும். இதனடிப்படையில், ஒன்பது நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள், 25 ஊராட்சிகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்படும். தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்படாத வகையில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2011ம் ஆண்டு முடிந்ததும், புதிய மாநகராட்சி அமைக்கப்படலாம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் புதிய வார்டுகள், மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கப்படலாம். சென்னை மாநகராட்சியின் தற்போதைய வார்டுகளும் மக்கள் தொகை அடிப்படையில் மாற்றி அமைக்கப்படலாம். மேலும், சமீபத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாநகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை போன்று, சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு உள்ள பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல், தற்போதைய வார்டுகளை மாற்றியமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் சென்னை மாநகராட்சி கமிஷனர் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. இப்பணிகளை மேற்கொள்ள, தேவையெனில் சிறப்பு அதிகாரியை பணியமர்த்திக் கொள்ளவும் அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், சிறப்பு அதிகாரியின் அறிக்கை ஆறு மாதத்துக்குள் அரசிடம் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**– 30.12.2009, தினமலர்**

## காஞ்சி மாவட்டத்தில் இன்று கிராம சபை சட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் 648 ஊராட்சி மன்றங்களில் குடியரசு தினத்தன்று கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும் என்று மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே.மிஸ்ரா தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடியரசு தினத்தன்று 648 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் காலை 11மணிக்கு நடைபெறும். கூட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கூலியை ரு.100 ஆக உயர்த்தியதை தெரிவிக்க வேண்டும்.

2009 அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஊராட்சியின் பொது நிதி செலவினம் குறித்து விவாதிக்க வேண்டும். தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கலைஞர் வீட்டுவசதி திட்டத்தின் கீழ்வரும் 6 ஆண்டுகளில் தமிழகத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள குடிசை வீடுகளுக்கு பதிலாக 21லட்சம் காங்கிரிட்வீடுகள் கட்டிதரப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் பட்டாவோ அல்லது பத்திரமோ வைத்திருக்க வேண்டும். இதை பொது மக்கள் கவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். மேலும் ஊராட்சி மன்ற தலைவரால் கொண்டு வரப்படுகின்ற இதர திட்டங்கள் குறித்தும் விவாதிக்க வேண்டும் இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தனது செய்தி குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**– தீக்கதிர், 26.1.2010**

# ’200 நாள் வேலை; ரூ.150 கூலி வழங்குக!’

வறட்சியின் கோரப்பிடியிலிருந்து கிராமப்புற மக்களைப் பாதுகாத்திட, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித்திட்ட வேலை நாட்களை 100 இலிருந்து 200 ஆக அதிகப்படுத்திடுமாறு அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கோ. வீரய்யன், பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் கோரியுள்ளனர்.

தமிழகத்தில் விவசாயத்தில் கிடைக்கும் வேலை வாய்ப்பையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் விவசாயத்தொழிலாளர்கள், ஏழை எளிய விவசாயிகள் வறட்சியால் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இந்த ஆண்டு ஆடி 12ஆம் தேதி பாசனத்திற்கு மேட்டூரின் தண்ணீர் திறந்துவிடப்பட்டு ஆடி, ஆவணி முடியும் தருவாயில் கூட, நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்ட வயல் வெளிகளில் மனிதத் தலைகளையே பார்க்க முடியவில்லை. இந்த மாவட்டங்களே இப்படி என்றால் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் விவசாய வேலைகளைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. இந்த நிலையில் அன்றாட வருவாயிலிருந்து வாழ்ந்து வரும் குடும்பங்கள் சொல்லொண்ணா துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகி இருக்கின்றன. இந்த நிலையில் கிராம மக்களுக்கு ஒரே வாழ்வாதாரமாக இருப்பது தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் வேலையும் அதில் வரும் கூலியும் தான் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

தமிழகத்தில் வேலை நடைபெறும் பகுதிகளில் 2009 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை கணக்கிட்டு ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும், மூன்று நபர்கள் இருக்கும் சில குடும்பங்களில் சேர்ந்து வேலை செய்திருந்தால் குடும்பத்திற்கு 100 நாள் முடிந்துவிட்டது. இனி எந்த வேலையும் கொடுக்க முடியாது என்று மறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வறட்சியால் இன்று ஏற்பட்டிருக்கும் விசேஷமான நிலை கருதி, மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி, வேலை நாட்களை அதிகப்படுத்த வேண்டும். நிலைமையின் கடுமையை உணர்ந்து மாநில அரசு இதில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் கர்நாடகாவில் 36 கன அடி வேலை செய்தால் முழுநாள் சம்பளம் என்று வழங்கப்படும் போது, தமிழ்நாடு அரசு 57 கன அடி வேலை செய்தால் தான் முழுச் சம்பளம் என்பதும், பல மாதங்களாக மழையின்றி காய்ந்து கிடக்கும் நேரத்தில் 57 கன அடி வேலை செய்யவில்லை என்றும் கூறி கூலியைக் குறைக்கிறார்கள். அதோடு விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்யாமலேயே கூலி கேட்பதாக அவதூறு பிரச்சாரம் வேறு செய்யப்படுகிறது. எனவே வேலையின் அளவு குறைக்கப்பட வேண்டும். இவ்வளவு தான் வேலை செய்ய வேண்டும் என்று முதலிலேயே முறையாக அளந்து கொடுக்கப்படுவதில்லை. (சில இடங்களில் பெயருக்கு செய்யப்படுகிறது). ஒன்றிய மேற்பார்வையாளர் வந்து அளக்கும்போது வேலை செய்தவர்களின் பிரதிநிதிகளைக்கூட வைத்துக் கொண்டு அளப்பதில்லை.

சாலைகள் பராமரிப்பு போன்ற இலகுவான வேலைகளை தலித் அல்லாதவர்களுக்குக் கொடுப்பது, குளம் வெட்டிமேலே கொண்டுபோய் மண் கொட்டும் வேலைகளை தலித் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது இதுபோன்ற பாரபட்சங்களும் நடைபெறுகின்றன. பயனாளியிடம் இருக்கும் வேலை செய்தார்கள் என்று குறிப்பிடுவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை. பயனாளிகளிடம் இருக்கும் அட்டையில் கொடுக்கும் சம்பளம் எழுதப்படுகிறது. அதிகாரிகளிடம் இருக்கும் ஆவணங்களில் 80 ரூபாய் கூலி கொடுக்கப்பட்டிருப்பதாக உள்ளது. ஊதாரணமாக சேலம் மாவட்டம் ஓமலூர் ஒன்றியத்தில் ரூ.79.50 சம்பளம் கொடுத்து விட்டதாக இருக்கிறது. பயனாளிகளின் அட்டைக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. பினாமி அட்டைகள், இறந்துபோனவர்கள் அட்டைகள் எல்லாம் வேலை செய்ததாகப் பதிவு செய்யப்பட்டு, அதற்கு எடுக்கும் பணம் வேலை செய்தவர்கள் கணக்கில் குறிக்கப்படுகிறது. இப்படி நடைபெறும் மோசடிகள் இன்னும் பல கூறிக்கொண்டே போக முடியும்.

**– தீக்கதிர், 14.09.09**

வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண். 10, தாமஸ்நகர், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின் அஞ்சல் : hrf@md3.vsnl.net.in

இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org